# *பின்னிணைப்பு 1*

# முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்[1]

## நாணயக் கொள்கை

| | | |
|---|---|---|
| 2020 சனவரி 30 | - | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| 2020 மாச்சு 17 | - | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.25 சதவீதத்திற்கும் 7.25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| | - | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீதும் பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதமானது 2020 மாச்சு 16இல் ஆரம்பமாகின்ற ஒதுக்குப் பராமரிப்புக் காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 5.00 சதவீதத்திலிருந்து 4.00 சதவீதத்திற்கு 1.00 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டது. |
| 2020 ஏப்பிறல் 03 | - | 2020 ஏப்பிறல் 03 அன்று வியாபாரம் முடிவுறுத்தப்பட்டதிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.00 சதவீதத்திற்கும் 7.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| 2020 ஏப்பிறல் 16 | - | வங்கி வீதம் 500 அடிப்படைப் புள்ளிகளினால் 10.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் எல்லை + 300 அடிப்படைப் புள்ளிகளினால் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தன்னியக்கமாகவே சீராக்கம் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டது. |
| 2020 மே 06 | - | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 2020 மே 06 அன்று வியாபாரம் முடிவுறுத்தப்பட்டதிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. வங்கி வீதம் 10.00 சதவீதத்திலிருந்து 9.50 சதவீதத்திற்கு தன்னியக்கமாகவே குறைக்கப்பட்டது. |
| 2020 யூன் 16 | - | 2020 யூன் 16 இலிருந்து ஆரம்பமாகின்ற ஒதுக்குப் பேணும் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீது ஏற்புடைய நியதி ஒதுக்கு விகிதம் 4.00 சதவீதத்திலிருந்து 2.00 சதவீதத்திற்கு 2.00 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்ட அதேவேளை, நியதி ஒதுக்கு விகிதத்திற்கான பணப் பங்களிப்பு 2.00 சதவீதத்திலிருந்து 1.00 சதவீதத்திற்குக் குறைப்பட்டது (நாணயத் தாள்கள் மற்றும் நாணயங்களின் 2 சதவீதத்திற்கு மேல் மற்றும் அதற்கு மேல் 1 சதவீதம் மட்டுமே அதன் ஒதுக்குகளின் பகுதியாகக் கருதப்படும்). |
| 2020 யூலை 09 | - | 2020 யூலை 09ஆம் நாளன்று வியாபாரம் முடிவடைவதிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 4.50 சதவீதத்திற்கும் 5.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. வங்கி வீதம் 9.50 சதவீதத்திலிருந்து 8.50 சதவீதத்திற்கு தன்னியக்கமாகவே குறைக்கப்பட்டது. |

## சிறப்புக் கடன் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| 2020 சனவரி 27 | - | ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையினை ரூ.390 மில்லியனிலிருந்து ரூ.950 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கும் உயர்ந்தபட்சக் கடன் தொகையினைக் கடன்பாட்டாளரொருவருக்கு ரூ.500,000 இலிருந்து ரூ.1,000,000 அதிகரிப்பதற்கும் ஏற்ற விதத்தில் சுயதொழில் ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் - கட்டம் II இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. |

1 2020 ஒத்தோபர் 07 வரை நடைமுறைப்படுத்தப்பட்டதும் அதேபோன்று அண்மைய எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்களையும் உள்ளடக்குகிறது. 2019 திசெம்பர் 01 இலிருந்து 2020 ஏப்பிறல் 01 வரையான காலப்பகுதியில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகள் (உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் பொதுமக்களுக்கான அறிவித்தல்களாக வெப்தளத்தில் பிரசுரிக்கப்பட்டவை) பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்குட்பட்டவையாகும்.

| | | |
|---|---|---|
| 2020 பெப்புருவரி 25 | - | சிறிய மற்றும் நடுத்தரத் துறை தொழில்முயற்சிகளில் பாதிக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு உற்சாகமளிப்பதற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வசதியானது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் தற்பொழுது செயற்படாக் கடன் வகைக்குள் காணப்படும் ஏற்கனவேயுள்ள அவர்களது வாடிக்கையாளர்களுக்கு 2020 காலப்பகுதியில் வழங்கப்படுவதற்காக புதிய தொழிற்படு மூலதனத்தில் 75 சதவீதத்திற்கு பாதுகாப்பாக கொடுகடன் உத்தரவாதத்தினை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2020 மாச்சு 27 | - | கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்காக 4.00 சதவீத வட்டியில் ரூ.50 பில்லியன் வரையிலான சலுகைக் கடன் திட்டம், சௌபாக்கிய கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி (கட்டம் I - மீள்நிதியிடல் திட்டம்) அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2020 ஏப்பிறல் 01 | - | கொவிட்-19 பரம்பல் மூலம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த தனிப்பட்டவர்கள் மற்றும் சுயதொழில்கள் உள்ளடங்கலாக நுண்பாக மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்கு 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 88ஆம் பிரிவின் கீழ் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி (கட்டம் I) கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. |
| 2020 ஏப்பிறல் 09 | - | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் 33 குறுகிய காலப் பயிர்களைப் பயிரிடுவதில் ஈடுபட்டுள்ள சிறியளவிலான வேளாண்மையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் நிலவுகின்ற கொவிட்-19 பரம்பலைக் கருத்திற்கொண்டு புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் நிதியளிப்பதற்கு "சௌபாக்யா வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை" உள்ளடக்குவதற்கும் இறுதிக் கடன்பெறுநருக்கான நடப்பிலுள்ள வட்டி வீதத்தினை ஆண்டிற்கு 7.00 சதவீதத்திலிருந்து 4.00 சதவீதமாகக் குறைப்பதற்கு புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தம் செய்யப்பட்டன. |
| 2020 யூன் 16 | - | 18-40 வயதுக்கிடைப்பட்ட புதிய இளம் தொழில்முயற்சியாளர் ஒருவருக்கான உயர்ந்தபட்ச கடன்தொகையினை ரூ.500,000 ஆக (ரூ.50,000 கொண்ட கொடை உள்ளடங்கலாக) அதிகரிப்பதற்கு "**சுவசக்தி** - 1 மில்லியன் தொழில்வாய்ப்புகளை நோக்கி" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. |
| | - | கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்காக 4.00 சதவீத வட்டி வீதமொன்றில் 2020 மாச்சு 27ஆம் நாளன்று அறிமுகப்படுத்தப்பட்ட சலுகைக் கடன் திட்டம் (சௌபாக்கியா கொவிட்-19 புத்தியிரளித்தல் வசதி - கட்டம் II) ரூ.150 பில்லியனுக்கு விரிவாக்கப்பட்டது. |
| 2020 யூன் 18 | - | ஆண்டிற்கு 4 சதவீதத்தை விஞ்சாத ஒரு சலுகை வீதத்தில் அரசாங்கத்தின் தாமதமான கொடுப்பனவுகளுக்குப் பதிலாக திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள் மூலம் கட்டடவாக்கத் துறைக்கு கடன் வழங்குவதற்கு ஆதரவளிப்பதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ஒரு வாக்குறுதிச் சான்றிதழ் பெறுகையின் மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ஒரு சிறப்புத் திரவத்தன்மை வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2020 யூன் 19 | - | கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் வியாபாரங்களுக்கு தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்காக சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு பிற்சேர்க்கையொன்று விடுக்கப்பட்டது. இவ்வசதியானது நாணய விதிச் சட்டத்தின் 83ஆம் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி" (கட்டம் II) என அழைக்கப்பட்டது. |
| 2020 யூன் 30 | - | கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களை மேலும் வசதியளிப்பதற்கு கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இது மற்றைய இரண்டு கட்டங்களுடன் இணையாகச் செயற்படுவதற்கு நாணய விதிச் சட்டத்தின் 108ஆம் பிரிவின் கீழ் "சௌபாக்கியா" கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி (கட்டம் III) என அழைக்கப்பட்டது. |

2020 யூலை 01 - வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நுண்பாக மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் என்பவற்றுக்கான கொடுகடன் வழங்கலுக்காக இறுதி கடன்பெறுநருக்கான நடப்பிலுள்ள வட்டி வீதத்தினை ஆண்டுக்கு 8.00 சதவீதத்திலிருந்து ஆண்டுக்கு 6.00 சதவீதமாகக் குறைப்பதற்கு “சௌபாக்யா” கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தம் செய்யப்பட்டன.

2020 யூலை 24 - கட்டவாக்கத் துறைக்கான திரவத்தன்மை வசதி, கட்டடவாக்கத் துறையிலுள்ள அரசாங்கத்தின் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்கள், மருந்தாக்கற் துறைகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட ஏனைய துறைகள் போன்றவற்றிற்கும் அரசாங்கத்தின் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்கள் போன்றவர்களுக்குச் சேரவேண்டிய வெளிநின்ற உண்டியல்களின் கொடுப்பனவுகளுக்கான ஏற்பாவணக் கடிதம் கிடைக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது.

## நிதியியல் துறை

### உரிமம்பெற்ற வங்கிகள்

2020 சனவரி 30 - தகுதியான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்பெறுநர்களுக்கு கொடுகடன் உதவியை வழங்குவதற்கு ஒரு சிறப்புக் கொடுகடன் உதவித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கும் விதமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்குச் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

2020 மாச்சு 01 - ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து 180 நாட்கள் வரை ஏற்றுமதி கொடுகடன் வசதியினைத் தீர்ப்பதற்கு வழங்கப்பட்ட அதியுச்ச கால நீடிப்பினை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கும் முகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

2020 மாச்சு 19 - ஏற்றுக்கொள்ளல் மற்றும் முற்கொடுப்பனவு ஆவணங்களுக்கெதிராக நாணயக் கடிதங்களின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதி மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி வசதிகளை நிறுத்துவதை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டது. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவும் நிறுத்தப்பட்டது.

2020 மாச்சு 24 - அதிமேதகு சனாதிபதியினால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக கொவிட்-19 பரவலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்குச் சலுகை நடவடிக்கைகள் வழங்குவதை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

2020 மாச்சு 27 - 2020 மாச்சு 25 இலிருந்து சுயதொழில் செய்யும் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளடங்கலாக கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் மீள்நிதியிடல் வசதியில் பங்கேற்கும் தகுதியை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. இந்தச் சுற்றறிக்கை 2020 மாச்சு 24ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கைக்குப் பிற்சேர்க்கையாக வெளியிடப்பட்டதுடன் மீள்நிதியிடல் வசதியினை அமுல்படுத்துவதற்கான தொழிற்பாட்டு வழிகாட்டல்களை குறித்து நிற்கின்றது.

- வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மையை மதிப்பீடு செய்த பின்னர் கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களை ஆதரிக்கும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கி அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானித்தது. இதன்படி, அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முக்கியமாக உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள்,

உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவமல்லாத வங்கிகள் ஆகியவற்றின் மூலதன தாங்கிருப்புப் பேணுகையைக் குறைப்பதற்கு அனுமதித்தல், செயற்படாக் கடன்களின் வகைப்படுத்தல் மீதான குறிப்பிட்ட தேவைப்பாடுகளைத் தளர்த்துதல், வங்கிகள் குறிப்பிட்ட நிபந்தனைகளை உறுதிசெய்யும் வகையில் ரூபாயில் வெளிநாட்டு நாணயக் கடன்களை மாற்றுவதற்கும் மீட்பதற்கும் அனுமதித்தல் மற்றும் 2020 இறுதியில் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை இதுவரை நிறைவு செய்யாத உரிமம்பெற்ற வங்கிகளின் மூலதனத்தை மேம்படுத்துவதை 2022 இறுதிக்கு ஒத்திவைத்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

2020 ஏப்பிறல் 17 - மத்திய வங்கியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச நாளாந்த வைப்புத் தேவைப்பாடு 2020 ஏப்பிறல் 16ஆம் திகதி ஆரம்பமாகின்ற ஒதுக்குப் பேணல் காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 90 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

2020 ஏப்பிறல் 27 - கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் குறுங்கால நிதியியல் தேவைகளுக்கு நிதியளிப்பதற்காக அடகு முற்பணம் பெறும் குறைந்த வருமானமீட்டுவோருக்கு நிவாரணம் வழங்கவேண்டிய அவசியத்தைக் கருத்திற்கொண்டு, தனிப்பட்ட தங்க நகைகளை ஈடுவைத்துப் பெறப்படும் அடகு முற்பணங்களுக்கு உரிமம்பெற்ற வங்கிகளால் விதிக்கப்படும் அதிகபட்ச வட்டி வீதத்தை அறிவித்து நாணயச் சட்ட கட்டளையொன்று வழங்கப்பட்டது.

2020 மே 05 - கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வங்கிகளின் திரவத்தன்மை நிலைகளின் மீது எழக்கூடிய எந்தவொரு சாத்தியமான தாக்கத்தையும் குறைக்கும் நோக்குடன் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு திரவத்தன்மையை வழங்குவதற்காக அசாதாரண ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, 2021 யூன் 30 வரை நிபந்தனைகளுக்குட்பட்டு நியதித் திரவச்சொத்து விகிதத்தினைக் கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக குறிப்பிட்ட சொத்துக்களை திரவச்சொத்துக்களாகக் கருத்திற்கொள்ளப்படுவதை அனுமதித்தும் மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை மற்றும் தொடர்ச்சியான அறிக்கையிடல் என்பவற்றுடன் திரவத்தன்மைக் காப்பு விகிதம் மற்றும் நிகர நிலையான நிதியிடல் விகிதம் என்பவற்றின் குறைந்தபட்ச தேவைப்பாட்டைக் குறைத்தும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கிச்சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான அவசரகாலக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பின் கீழ், ஏற்றுக்கொள்ளக் கூடிய பிணைகள் மற்றும் திரவத்தன்மை எதிர்வு கூறல்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கை ரூபாவில் திரவத்தன்மையைப் பெற உரிமம்பெற்ற வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

2020 மே 13 - உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மையைப் பொருத்தமான மட்டத்தில் பேணுவதை உறுதி செய்வதற்கும் காசுப்பாய்ச்சலை முன்மதியுடன் முகாமை செய்வதற்கும் உரிமம்பெற்ற வங்கிகள் காசுப் பங்கிலாபங்கள், இலாப மீளனுப்பல்கள், பங்குகளை மீள வாங்குதல் மற்றும் முகாமைத்துவ உதவுதொகைகள் மற்றும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளை அதிகரித்தல் போன்ற தற்றுணிபுக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்தி வங்கிச் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் மூலதனச் செலவினங்கள் உறப்படும் பொழுது முன்மதியுடன் செயற்படுவதுடன், அதிக கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதுடன், அத்தியாவசியமற்ற செலவினங்களைச் செய்வதிலிருந்து முடிந்தவரை விலகியிருத்தல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டன.

2020 மே 15 - உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பில் முன்பு வெளியிடப்பட்ட வங்கிச் சட்டப் பணிப்புரைகளை பிரதியீடு செய்யும் வகையில் வங்கிச் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டது.

2020 யூன் 19 - உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி, நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை கொள்வனவு செய்வதற்கு வங்கியின் புதிய வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களைப் பயன்படுத்தி நிதியிட்டாலொழிய, நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை கொள்வனவு செய்வதை 3 மாத காலத்திற்கு நிறுத்தி வைப்பதற்கான வங்கிச் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன.

2020 யூலை 16 - 2020.12.31 வரை நியதித் திரவச்சொத்து விகிதத்தைக் கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக ஒப்பந்தக்காரர்களுக்கான நிலுவைகளை 2020.12.31 இற்குள் செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கான நிலுவையாகவுள்ள பட்டியல்களின் கொடுப்பனவுகளுக்கான ஏற்பாவணக் கடிதத்திற்கெதிராக கட்டடவாக்கத் துறைக்கு திரவத்தன்மை வசதியளிப்பதற்கான திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட புதிய கடன் வசதிகளை 10 சதவீத உச்சமட்டத்தில் திரவச்சொத்துக்களாகக் கருத்தில் கொள்ள வங்கிகளை அனுமதிக்கும் வங்கிச் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. புதிய பொருளாதார நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட இத்தகைய கடன் வசதிகள் கடன்படுநரின் தற்போதைய கடன் வசதிகளின் வகைப்படுத்தல் நிலையைக் கருத்திற்கொள்ளாமல் அத்தகைய கடன்களைத் தொழிற்படு கடன்களாகக் கருத்திற்கொள்ள அனுமதிக்கப்பட்டன. வெளிநின்ற உண்டியல்களின் கொடுப்பனவுகள் மீதான ஏற்பாவணக் கடிதம் மற்றும் சௌபாக்யா கொவிட் - 19 புத்தியிரளித்தல் வசதியின் மூன்றாம் கட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் என்பன அவற்றுக்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் இடர்நேர்வுக் குறைப்பு உபாயங்களாகக் கருதப்படுவதோடு பூச்சிய வீதத்தில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்டதாக இருக்கும்.

- சுற்றுலாத்துறை தொடர்பான வாகனங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை வசதிகளின் வெளிநின்ற மூலதனம் தொடர்பில் தற்போதுள்ள கொடுகடன் சட்ட இசைவுத்தாமத காலத்தினை நீடிக்க நிதியியல் நிறுவனங்களை அறிவுறுத்தி, உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. கடன்படுநர்களுக்கு அசௌகரிகமில்லாத வகையில் நிதியியல் நிறுவனங்கள் கடன் தாமத காலப்பகுதியில் வட்டியை மீளப்பெற முடிவதுடன், அத்தகைய குத்தகை வசதிகளுக்கான திரண்ட தண்ட தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மேலும், பொதுப் போக்குவரத்து சேவைகளை வழங்கும் பேரூந்துகளுக்கு வழங்கப்பட்ட குத்தகை வசதிகள் மற்றும் சமமான மாதாந்த தவணைக் கட்டணங்களைக் கொண்ட கடன்கள் தொடர்பில் கடன் தாமதகாலத்தில் விதிக்கக்கூடிய ஆகக்கூடிய மேலதிக வட்டி வீதம் மற்றும் மேலதிக வட்டியை மீளப்பெறவேண்டிய முறை என்பன உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

- சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுடைய வருடாந்தப் புரள்வு உச்சஎல்லை ரூ.1 பில்லியனாக அதிகரிப்பதற்கு பாசல் III இன் கீழ் மூலதன தேவைப்பாடுகள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் தொடர்பில் ஒரு திருத்தம் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டது.

2020 ஓகத்து 21 - உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்படும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுக்குப் பிரயோகிக்கப்படக்கூடிய அதிகபட்ச வட்டி வீதங்களை அறிவிக்கும் நாணய விதிச்சட்டக் கட்டளையொன்று இது தொடர்பில் வெளியிடப்பட்ட முந்தைய நாணயவிதிச் சட்டக் கட்டளைகளுக்குப் பதிலாக வெளியிடப்பட்டது. இதற்கமைய, குறைக்கப்பட்டுள்ள சந்தை வட்டி வீதங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் கடன் அட்டைகள், முன்னொழுங்குபடுத்தப்பட்ட தற்காலிக வங்கி மேலதிகப் பற்றுக்கள், அடகு முற்பணங்கள், எல்லாக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான தண்ட வட்டி வீதங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான மேம்படுத்தப்பட்ட கடன் வசதிகள் ஆகியவற்றிற்குப் பிரயோகிக்கப்படக் கூடிய அதிகபட்ச வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன.

2020 ஓகத்து 26 - கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மீள்செலுத்தல் தொடர்பான சட்ட இசைவுத்தாமதக் காலத்தினை சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நீடிப்பதற்கான சுற்றறிக்கை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2020 செத்தெம்பர் 08 - உரிமம்பெற்ற வங்கிகளின் வாக்களிக்கும் உரிமையினைக் கொண்டுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தின் பொருண்மிய ஈடுபாட்டினைக் கையேற்பது மீதான வரையறையினை அதிகரிக்கின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. இதன்படி, பல்புடை நிதியியல் நிறுவனங்கள், கையேற்கப்பட்ட பொருண்மிய ஈடுபாடுகள் குறிப்பிட்ட திகதியிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு உரிமம்பெற்ற வங்கிகளின் 20 சதவீதத்தினை விஞ்சாத பொருண்மிய ஈடுபாட்டினை கையேற்பதற்கு அனுமதிக்கப்பட்டன.

2020 செத்தெம்பர் 30 - உள்முக முதலீட்டு பரஸ்பர பரிமாற்றல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதனை வசதிப்படுத்துவதற்காக நிதியில் பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடைத்தான பொதுவான நியதிகளையும் நிபந்தனைகளையும் திருத்துவதற்கான வங்கித்தொழில் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

## உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்

2020 பெப்புருவரி 14 - இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்மதியுடைய தேவைப்பாடுகளைப் பின்பற்றுவது பற்றிய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை நிர்ணயிக்கின்ற விதத்தில் கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

2020 பெப்புருவரி 17 - இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்மதியுடைய தேவைப்பாடுகளைப் பின்பற்றுவது பற்றிய சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் குறைந்தபட்ச தேவைப்பாடுகளை நிர்ணயிக்கின்ற விதத்தில் கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

2020 மாச்சு 10 - தகைமையுடைய சிறிய நடுத்தர தொழில்முயற்சிக் கடன்பாட்டாளர்களுக்கு கொடுகடன் ஆதரவினை வழங்குவதற்காக சிறப்புக் கொடுகடன் ஆதரவுதிட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது..

2020 மாச்சு 24 - கொவிட்-19 பரவலினால் மோசமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் உதவும் விதத்தில் நிவாரண வழிமுறைகளை வழங்குவதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2020 மாச்சு 27 - 2020 மாச்சு 24ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிற்சேர்க்கையாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டதுடன், சுயதொழில் செய்யும் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் உட்பட, கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு உதவியளிப்பதற்காக ரூ.50 பில்லியன், ஆறு மாத மீள்நிதியிடல் வசதிக்கு ஆதரவளிப்பதற்காக தொழிற்பாட்டு வழிகாட்டல்களும் ஏற்படுத்தப்பட்டன.

2020 மாச்சு 31 - தற்போதைய சந்தை நிலைமைகளைக் கருத்தில் கொண்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் பேணப்படவேண்டிய திரவச்சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கு விடுக்கப்பட்ட திருத்தங்கள் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து 6 மாத காலப்பகுதிக்கு நடைமுறையிலிருக்கும்.

2020 ஏப்பிறல் 24 - உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் விடுக்கப்பட்ட தற்போதுள்ள பணிப்புரை திருத்தப்பட்டமையானது உள்ளூரில் பொருத்தப்பட்ட உந்து ஊர்திகளுக்கும் கடுவழிப் பயண ஊர்திகளுக்கும் (எஸ்யூவி) வான்களுக்கும் உயர்ந்த பெறுமதிக்கான கடன் விகிதம் உயர்த்தப்படுவதனை அனுமதிக்கின்றது.

- உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீதான பணிப்புரை ஓரளவு குறைக்கப்பட்ட வீதங்களுடன் திருத்தப்பட்டது.

2020 யூன் 18 - ஏற்கனவே பதவியிலிருக்கின்ற 70 வயதினை அடைந்த உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளரொருவர் நாணயச் சபையின் முன்ஒப்புதலுடன் தொடர்ந்தும் பதவிவகிப்பதனை அனுமதிக்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கம்பனி ஆளுகை பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

2020 யூன் 26 - ஏற்கனவே பதவியிலிருக்கின்ற 70 வயதினையடைந்த சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்றின் பணிப்பாளரொருவர் நாணயச் சபையின் முன்ஒப்புதலுடன் தொடர்ந்தும் பதவியிலிருப்பதனை அனுமதிக்கின்ற விதத்தில் சிறப்பியல்பு பெற்ற குத்தகைக் கம்பனிகளுக்கான கம்பனி ஆளுகைப் பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

2020 யூலை 16 - ஒப்புதலளிக்கும் செயன்முறைகளை மீள ஆராய்தல், புதிய வியாபாரத் தாபனங்களைத் திறப்பதற்கு திட்டமிடுவதில் குறைந்தபட்ச பிரமாணங்களை நிர்ணயித்தல், பணிப்பாளர் சபையிடமும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரிடமும் பொறுப்புக்களைக் கையளித்தல், குறைந்தபட்ச இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களையும் தற்போதுள்ள மற்றைய கிளைகளைத் தரப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளையும் நிர்ணயித்தல் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வியாபார விரிவாக்கம் மற்றும் தொழிற்பாடுகள் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

- 2020 மாச்சு 27ஆம் நாளன்று விடுக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் நியதிகளில் வழங்கப்பட்ட ஏற்கனவேயுள்ள ஆறு மாத கால சட்ட இசைவுத்தாமதத்தினை சுற்றுலா தொடர்பான ஊர்திகளுக்கு வழங்கப்பட்ட குத்தகைக்குவிடல் வசதிகளின் வெளிநின்ற மூலதனம் தொடர்பில், மேலும் ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2020 யூலை 30 - 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவின் கீழ் உரிமை அல்லது பொறுப்பு ஏதும் இல்லாமல் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட 12 மாதங்களுக்கும் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகளையும் உரிமை அல்லது பொறுப்பு இல்லாமல் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளையும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளையும் உள்ளடக்கும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் திரவச்சொத்துக்களின் வரைவிலக்கணம் திருத்தப்பட்டது.

2020 ஓகத்து 20 - ஒப்புதலளிக்கும் செயன்முறைகளை மீள ஆராய்தல் புதிய வியாபாரத் தாபனங்களைத் திறப்பதற்கு திட்டமிடுவதில் குறைந்தபட்ச பிரமாணங்களை நிர்ணயித்தல், பணிப்பாளர் சபையிடமும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரிடமும் பொறுப்புக்களைக் கையளித்தல், குறைந்தபட்ச இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களையும் தற்போதுள்ள மற்றைய கிளைகளைத் தரப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளையும் நிர்ணயித்தல் தொடர்பில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு வியாபார விரிவாக்கம் மற்றும் தொழிற்பாடுகள் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

2020 செத்தெம்பர் 28 - உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அவற்றின் அலுவல்சார் வெப்தளத்திலும் செய்தித்தாள்களிலும் அனைத்து மூன்று மொழிகளிலும் நிதியியல் தகவல்களையும் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளையும் வெளியிடுவதற்கான புதிய படிவத்தினை பின்பற்றுமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அதன் அலுவல்சார் வெப்தளத்தில் அனைத்து மூன்று மொழிகளிலும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள், கொடுகடன் தரமிடல் அறிக்கைகளுடனான சுயாதீனக் கணக்காய்வாளர் அறிக்கையையும் வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

2020 செத்தெம்பர் 30 - கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதம் 2020 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து 2021 மாச்சு 31ஆம் நாள் வரை மேலும் ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்படுவது தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. இச்சுற்றறிக்கை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து 2020 யூலை 16ஆம் நாள் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்டது.

- கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நீண்ட காலத் தாக்கத்தின் காரணமாக சவால்மிக்க தொழிற்பாட்டுச் சூழலைக் பரிசலனையில் கொண்டு 2020 மாச்சு 31இல் விடுக்கப்பட்ட திரவச் சொத்து மீதான பணிப்புரையின் செல்லுபடியாகும் திகதியை 2021 மாச்சு 31 வரை மேலுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கின்ற விதத்தில் பணிப்புரைக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| இனிவரவிருப்பவை | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தீர்மானக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்திற்கு திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும். |
| | - | முழுமையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய பார்வையொன்றுடன் முதனிலை வணிகர்கள் உட்பட, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மீளஆராய்ந்து ஒழுங்குமுறைப்படுத்தல், தற்போதைய சந்தை அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் புதிய பணிப்புரைகளை விடுத்தல் மற்றும் தற்போதுள்ள பணிப்புரைகளைத் திருத்துதல். உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளுக்கு சொத்துரிமை வரையறை மீது பணிப்புரையொன்று விடுவிக்கப்படும். உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்களுக்கான கம்பனி ஆளுகை மீது பணிப்புரை, முதனிலை வணிகர்களுக்கான நிதியியல் அறிக்கையிடல் மற்றும் முதனிலை வணிகர்களுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு என்பன மீது பணிப்புரைகள் விடுக்கப்படவுள்ளன. |
| | - | நடுத்தர காலத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் சிறந்த செயலாற்றத்தினையும் உறுதிப்படுத்தும் விதத்தில் முதன்மைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல். |
| | - | சட்ட வரைஞர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களங்களின் உதவியுடன் நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபைச் சட்டம் இறுதிப்படுத்தப்படும் என்பதுடன் சட்டத்திற்கு இசைவான விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்று அபிவிருத்தி செய்யப்படும். |
| | - | நியமப்படுத்தப்பட்ட தீர்மானத் திட்டம், உரிமங்களை இரத்துச் செய்தல், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை மூடிவிடுதல் உட்பட உயர் இடர்நேர்வினையும் இடர்ப்பாடுகளையும் கொண்ட கம்பனிகளைக் கையாள்வதற்காக உடனடியான சரியான நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் ஆலோசனைப் பத்திரமொன்றினை வழங்குதல். |

## காப்புறுதி

| | | |
|---|---|---|
| 2020 பெப்புருவரி 19 | - | ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில்நுட்ப உதவியின் கீழ் வாடிக்கையாளர் கல்வி உபாயம் நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 2020 பெப்புருவரி 25 | - | இழப்புச் சீராக்கல் பணிகளை உரிமம்பெறாத இழப்புச் சீராக்குவோரிடமிருந்து பெற்றுக்கொள்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்துக் காப்புறுதியாளர்களையும் கேட்டுக் கொள்கின்ற “இழப்பு சீராக்குவோரைப் பதிவுசெய்கின்ற விதிகளின்” மீது விடுக்கப்பட்ட 42ஆம் இலக்கச் சுற்றறிக்கை 2017 யூலை 05ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2026/27 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. |
| 2020 ஏப்பிறல் 11 | - | பூட்கை உடமையாளர்களுக்கான நிவாரணமொன்றாகவும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து தேவைப்படும் ஆதரவாகவும் 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குடமையாளர்களுக்கான முதல் மற்றும் இறுதி பங்கிலாபக் கொடுப்பனவு மீதான இடைநிறுத்தலைக் கண்காணித்தல். |
| | - | கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பான ஏனைய நிவாரண வழிமுறைகள்:<br>• 2020 மார்ச்சு 01 இலிருந்து 2020 யூன் 30 வரை பதிவுசெய்யப்பட்ட பூட்கைகளுக்காக கடன்தீராற்றல் நோக்கங்களுக்காக கம்பனியின் முதன்மை அலுவலரினால் வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட உறுதிப்படுத்தலுக்குட்பட்டு, வெளிநிற்கும் பெறத்தக்க கட்டுப்பணத்தினை 90 நாட்களுக்குப் பரிசீலனையில் கொள்வதற்காக நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளை அனுமதித்தல்.<br>• முதன்மை அலுவலரினால் வழங்கப்பட்ட 2020 மார்ச்சு 31இல் முடிவடைந்த மாதத்திலிருந்து “இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதனத் தேவைப்பாடுகள் (உ-ம்: மூலதனப் போதுமைத் தேவைப்பாடு, மூலதனத்திற்கான மொத்தச் சொத்துக்களின் விகிதம் மற்றும் இடர்நேர்வு |

மூலதனத் தேவைப்பாடு) மற்றும் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களுக்கான 01ஆம் இலக்க இணங்குவிப்புத் தீர்மானங்களை நெருக்கமாகக் கண்காணித்தல்.

- கடன்தீராற்றலைக் கணிப்பதற்காக 2015ஆம் ஆண்டில் வர்த்தமானப்படுத்தப்பட்ட விதியின்படி, நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் இடர்நேர்வற்ற வட்டி வீதத்தினைப் பயன்படுத்துகின்றனவா என்பதனை மேற்பார்வை செய்தல்.
- மேலும், ஆணைக்குழு, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக கடன்தீராற்றல் மற்றும் நிர்ணயித்தல் - 01 இற்கான எதிர்மறையான தாக்கங்களையும் கட்டுப்பணக் கொடுப்பனவின் மீது வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட கொடுகடன் பற்றியும் ஒவ்வொரு விடயமாகப் பரிசீலனையில் கொள்ளும்.

2020 யூன் 03 - தரகுக் கம்பனிகள் தேறிய மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு நீடித்த காலப்பகுதியினை எடுக்கும் போது நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கையினை வலியுறுத்தும் விதத்தில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் "குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்" மீதான 19ஆம் இலக்கப் பணிப்புரை திருத்தப்பட்டது.

2020 யூன் 08 - இலங்கை காப்புறுதிச் சங்கம் மற்றும் ஒரு சில காப்புறுதியாளர்களைக் கவனத்திற் கொண்டு காப்புறுதிக் கம்பனிகளுக்கான கம்பனி ஆளுகைக் கட்டமைப்பின் மீதான 17ஆம் இலக்கப் பணிப்புரை திருத்தப்பட்டது.

2020 யூலை 02 - பூட்கை உடமையாளர்களினால் பூட்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனை கிரகிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அனைத்துக் காப்பறுதியாளர்களும் பூட்கைகளை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வழங்கப்படுவதனைக் கட்டாயப்படுத்தும் விதத்தில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - நிதியியல் துறையினை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம் - இது தொடர்பான ஒப்படைப் பொறுப்புக்கள் பெறப்படும் பொழுது செயற்றிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- இது தொடர்பான ஒப்படைப் பொறுப்புக்கள் பெறப்படும் பொழுது உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் சட்ட ரீதியாக மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

- தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்துடன் தொடர்பான ஒப்படைக்கப்பட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்

- முகவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் போது அனைத்துக் காப்புறுதியாளர்கள்/ தரகர்களினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மீதான பணிப்புரையொன்றினை விடுத்தல்.

## மூலதனச் சந்தை

2020 மாச்சு 31 - கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சந்தை சரிவடைந்தமையினால் பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்குடன், மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களிலிருந்து அவர்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளை அவர்களது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் விதத்தில் அனைத்துப் பதிவுசெய்யப்பட்ட கடன் வசதி வழங்குவோருக்கும்/ உரிமம்பெற்ற பங்குதரகர்களும் பணிக்கப்பட்டதுடன் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் மீது வட்டி விதிப்பதனையும் அறவிட்டுக் கொள்வதனையும் 2020 யூன் 30 வரை தவிர்த்துக் கொள்ளுமாறும் பணிக்கப்பட்டனர். மேலும், அனைத்துப் பதிவுசெய்யப்பட்ட கடன் வசதி வழங்குவோரும்/ உரிமம்பெற்ற பங்கு தரகர்களும் அவற்றின் கடமைகளைப் புரியும் போது அவர்களது வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்களைக் கவனத்தில் கொண்டு, அனைவரையும் சமமாகப் பாவித்தும் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2020 ஏப்பிறல் 30 - கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக, உரிமம்பெற்ற/ பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களினால் அறிக்கைகள் சமா்ப்பிக்கப்பட வேண்டிய காலக் கட்டமைப்பு பின்வரும் விதத்தில் நீடிக்கப்பட்டது:

- 2020 மாச்சு, ஏப்பிறல் மற்றும் மே மாதங்களுக்கான கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள், இணங்குவிப்பு அலுவலரின் அறிக்கைகள் மற்றும் கூறுநம்பிக்கைகளின் கூற்றுக்களைச் சமா்ப்பிக்க வேண்டிய திகதி குறிப்பிட்ட நேரக் கட்டமைப்பிலிருந்து மூன்று வாரங்களுக்கு நீடிக்கப்பட்டது.
- 2019 திசெம்பா் 31இலும் 2020 மாச்சு 31இலும் முடிவடைகின்ற நிதியியல் ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களைச் சமா்ப்பிக்க வேண்டிய திகதி குறித்துரைக்கப்பட்ட காலக் கட்டமைப்பிலிருந்து இரண்டு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.
- கூறுநம்பிக்கை நிதியத்திற்கான ஆண்டு மற்றும் இடைக்கால அறிக்கைகளைச் சமா்ப்பிக்க வேண்டிய காலம் குறித்துரைக்கப்பட்ட நேரக் கட்டமைப்பிலிருந்து இரண்டு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.
- இத்தொழிலின் பாதுகாப்பினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்தும் விதத்தில் பெருந்தொற்றுக் காலப்பகுதியில் அவற்றின் இடா்நோ்வுத் தோற்றப்பாட்டினையம் மூலவளங்களையும் உரிய விழிப்புக் கவனத்துடன் கண்காணிக்குமாறு உரிமம்பெற்ற/ பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.
- மேற்குறிப்பிட்ட நேர நீடிப்பு வழங்கப்பட்டிருப்பினும் கூட, நிறுவனங்களின் அவற்றின் உரிமம்பெற்ற அல்லது பதிவுசெய்யப்பட்ட வியாபாரங்கள் அல்லது ஏதேனும் விடயங்கள் தொடா்பாக அவற்றின் கடப்பாடுகள் இயலாற்றலை மோசமாகப் பாதிக்கின்ற அல்லது மோசமாகப் பாதிக்கும் போல் தோன்றுகின்ற ஏதேனும் அசாதாரணமான அத்தகைய நிறுவனங்களை நிதியியல் நிலைமையினை அல்லது அத்தகைய நிறுவனத்தின் நிதியியல் ஒருங்கிணைப்பு அல்லது அதன் முதன்மை நிறைவேற்று அலுவலா் அல்லது பணிப்பாளா்கள் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் பிரச்சனைகள் அல்லது நியாயமான பாதிப்புக்கள் காணப்படும் தன்மைகளை எடுத்துக்காட்டும் விடயங்கள் தொடா்பில் நிறுவனங்கள் பிணையங்கள் மற்றும் பரிவா்த்தனை ஆணைக்குழுவிற்கு உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

- கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் தொடா்ந்து அனைத்து உரிமம்பெற்ற/ பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களினதும் மைய ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கை மீதும் 2020ஆம் ஆண்டிற்கான பிணையங்கள் பரிவா்த்தனை ஆணைக்குழுவின் வருடாந்த உரிமம்/ பதிவுக் கட்டணங்கள் ஓராண்டிற்குப் பிற்போடப்பட்டன.

- அனைத்து முதலீட்டு ஆலோசனையாளா்களையும் முன்னைய தகைமைக் கட்டமைப்பிலிருந்து புதிய தகைமைக் கட்டமைப்பிற்கு மாற்றுவதற்கான கட்டாய தொடா்ச்சியான தொழில்சாா் அபிவிருத்தியைப் பூா்த்தி செய்கின்ற நிபந்தனைகளை நிறைவேற்றுவது ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது (2021 யூன் 30 வரை).

- அனைத்து முதலீட்டு ஆலோசனையாளா்களும் அவா்களது தொடா்பான பங்குத்தரகா்/வணிகா் கம்பனி உரிமத்தினைப் புதுப்பிப்பதற்கு குறைந்தபட்சம் இரண்டு தொடா்ச்சியான தொழில்சாா் அபிவிருத்தி ஆய்வரங்கு திறமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற தேவைப்பாடு தொடா்பில் அத்தகைய புதுப்பித்தல் திகதி 2020 மாச்சிலிருந்து செத்தெம்பருக்கிடையில் வருமாயின், மேற்குறிப்பிட்ட தொடா்ச்சியான தொழில்சாா் அபிவிருத்தி தேவைப்பாட்டினைப் பூா்த்திசெய்யும் பொருட்டான புதுப்பிக்கப்பட வேண்டிய திகதியிலிருந்து ஆறுமாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

2020 மே 28 - பங்குச் சந்தையின் அனைத்து மைய நடவடிக்கைகளையம் எண்ணியல் முறையில் மேற்கொள்வதற்கு வசதியளிக்கின்ற விதத்தில் கொழும்பு பங்குப் பரிவா்த்தனை விதிகளுக்குத் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

2020 யூன் 11 - வலுவூட்டல் சபை - பட்டியலிடல் விதித் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. உடனடி கவனம் தேவைப்படும் விதிகளின் பிரிவு பூர்த்தி செய்யப்பட்டது. தொடர்ச்சியான மேம்பாட்டுச் செயன்முறையின் பகுதியாக அவசரமான விதி மாற்றங்கள் தேவைப்படுமா என்பதனைக் கண்டறிவதற்காக, குறிப்பாக, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் சுமையினைக் குறைப்பது பற்றி மீளாய்வு செய்யப்படுகிறது.

- உள்நாட்டு நிறுவனங்களின் பல்-நாணயப் படுகடன் பட்டியலிடல் தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

2020 யூலை 15 - உண்மைச் சொத்து முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்பாளர் அறிமுகப்படுத்தப்பட்டது.

இனிவரவிருப்பவை - வலுவூட்டல் சபை தொடர்பில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களினால் வழங்கப்பட்ட படுகடன் பிணையங்களைப் பட்டியலிடுவதற்கான கொள்கையொன்றினை முன்மொழிதல்.

- பணிப்பாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலரினால் கையாளப்படுபவை தொடர்பான கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளை மேம்படுத்துதல்.

- பொறுப்பேற்றல் மற்றும் இணைத்தல், பட்டியலிடல் மற்றும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களை நீக்குதல் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகளை மதிப்பீடு செய்தல் தொடர்பான வழிகாட்டல்களை அபிவிருத்தி செய்தல்.

- கம்பனி ஆளுகை தொடர்பில் பட்டியலிடல் விதிகளை முன்மொழிதல்.

- பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு தற்போதுள்ள கணக்காய்வாளர் தெரிவுப் பிரமாணங்களைக் கூட்டிணைப்பதற்கு பட்டியலிடல் விதிகளை அறிமுகப்படுத்தல்.

- கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் ஆலோசனையுடன் வழங்கல் எதிர் கொடுப்பனவு பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கையொன்றினை வடிவமைத்தல்.

## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2020 சனவரி 20 - தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தன்னியக்கக் கூற்றுப்பொறி கொடுக்கல்வாங்கல்களுக்காக விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கட்டணங்களை உள்ளடக்குவதற்கான 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பொதுவான பணிப்புரைக்குப் பதிலாக பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளியூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கப்படக்கூடிய கட்டணம் தொடர்பில் 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பொதுவான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

2020 மே 14 - சில்லறைக் கொடுப்பனவுகளக்கு லங்கா கியூஆர் இனை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் செல்லிடத் தொலைபேசிகளை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் பண முறைமைகளின் தொழிற்பாட்டாளர்களையும் லங்கா கியூஆர் இன் வழங்குநர்கள் மற்றும் கையேற்பாளர்களாகத் தொழிற்படுத்துவதற்கான பொறுப்பாணையினை வழங்கும் விதத்தில் 2020ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2020 யூன் 01 - கொடுப்பனவுடன் தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகங்களிலுள்ள புதிய அபிவிருத்திகளை உள்ளடக்குவதற்காக வழிகாட்டல்களை இற்றைப்படுத்தும் பொருட்டு வழிகாட்டல் இலக்கம் 01/2018 இற்குப் பதிலாக, கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசிப் பிரயோகங்களுக்காக குறைந்தபட்ச இணங்குவிப்பு நியமத்தின் மீது 01/2020 இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

2020 யூன் 08 - லங்கா பே அதேநேர கொடுப்பனவுத் தளமூடாக மேற்கொள்ளப்படும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளிக் கொடுக்கல்வாங்கலொன்றிற்கான உயர்ந்தபட்ச பெறுமதி எல்லையினை

நிர்ணயிப்பதற்கான நடைமுறைகளை உள்ளடக்குவதற்காக கொடுக்கல்வாங்கல் பெறுமதி மீதான உயர்ந்தபட்ச வரையறை தொடர்பிலும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கட்டணம் தொடர்பிலும் 2020ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2020 செத்தெம்பர் 17 - லங்காசெட்டில் முறைமையின் கொடுக்கல்வாங்கல் கட்டணத்தினைத் திருத்துவதற்காகவும் வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்ளும் வெட்டு நேரத்தினை நீடிப்பது தொடர்பிலும் 2020ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

## பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்[2]

2020 பெப்புருவரி 05 - உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் பங்குதரகர் கம்பனிகள் என்பனவற்றிற்கான சூழலை அடிப்படையாகக் கொண்ட லங்காபின் அறிக்கையிடல் மீது 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

2020 யூன் 10 - கணக்காளர்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்லது கம்பனி பணி வழங்குவோருக்காக பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீது 2020ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

2020 யூன் 15 - தோற்றம்பெற்று வருகின்ற பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வு பற்றி விழிப்புடன் இருக்குமாறு நிதியியல் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2020ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2020 ஒத்தோபர் 22 - ஆட்கள் பதிவாளர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இலத்திரனியல் இடைமுகத்தினைப் பயன்படுத்தி நேரில் சந்தித்திராத வாடிக்கையாளரை அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல் தொடர்பாக 2020ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

2020 மாச்சு 19 - பொழுதுபோக்கு, வியாபாரம், பயிற்சி, மருத்துவ சிகிச்சை போன்றவை உட்பட ஏதேனும் நோக்கத்திற்காக வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் இலங்கையில் வதியும் ஆளொருவருக்கு விடுவிக்கின்ற வெளிநாட்டு நாணயத் தாள்களை ஐ.அ.டொலர் 5,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டுச் நாணயத்திற்கு மட்டுப்படுத்துவது தொடர்பில் (முன்னர் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய பயணப்படியான ஐ.அ.டொலர் 10,000 இலிருந்து) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிப்பதற்காக 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டன.

2020 மாச்சு 20 - குறிப்பிட்ட இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு நாணய முதலீடுகள் மீது விடுக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையுடன் இசைந்து செல்லும் விதத்தில் கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் திறந்த கணக்கு கொடுப்பனவு நியதிகள் என்பனவற்றின் கீழ் குறிப்பிட்ட இன்றியமையாதனவல்லாத நுகர்வோர் பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு விடுவிக்கும் செலாவணியினை உடனடியாக மூன்று மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களைக் கோருகின்ற 2020ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பணிப்புரை விடுக்கப்பட்டது.

- வெளிநாட்டுச் செலாவணியில் காணப்படும் மிகையான தளம்பல்களை முகாமைப்படுத்துவதற்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மைத்

2 இது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட முடக்க நிலையினைக் கருத்திற்கொண்டு அனைத்து அறிக்கையிடும் நிறுவனங்களினாலும் அடிப்படை அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி நீடிக்கப்பட்டிருக்கின்றமை பற்றி 2020 மாச்சு 31 அன்றும் 2020 ஏப்பிறல் 28 அன்றும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகள் நீங்கலானவை.

தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக விற்றல்-வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

2020 ஏப்பிறல் 02 - வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதனையும் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தினையும் கருத்திற்கொண்டு மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை மூன்று மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தும் விதத்தில் குறிப்பிட்ட வழிமுறைகளை விதிப்பதற்காக இல.2169/3 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

- இலங்கையில் வதியும் ஆட்களினால் வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக வெளிநாட்டு முதலீடுகளுக்காக வெளிமுகப் பணவனுப்பல்களைச் செய்வதற்கு வழங்கப்பட்ட பொதுவான அனுமதி பின்வருவன நீங்கலாக இடைநிறுத்தப்பட்டது:

  (அ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளிடமிருந்து முதலீட்டாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களிலிருந்து நிதியிடப்பட வேண்டிய முதலீடுகள், அல்லது

  (ஆ) அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய முதலீடுகள்

- நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான பணவனுப்பல்களுக்கானவை தவிர இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிபவரினால் வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தனியான வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடான வெளிமுகப் பணவனுப்பல்களை இடைநிறுத்துதல்

- ஏற்கனவே புலம்பெயர் படிகளைக் கோரிய புலம்பெயர்ந்தவர்களினால் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளினூடாக புலம்பெயர் படிகளின் கீழ் நிதிகளை வெளிநாட்டிற்கு அனுப்புதலை இடைநிறுத்தல்.

- முதற்றடவையாக புலம்பெயர் படிகளைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடை புலம்பெயர் படிகளை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 இற்கு மட்டுப்படுத்தல்.

- பொதுவான அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்கான விசேட அனுமதியினை வழங்குகின்ற மத்திய வங்கியின் நாணயச் சபையினது அதிகாரத்தினை மேலே (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களை திருப்தி செய்யுமிடத்து மாத்திரம் வழங்குவதற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

2020 ஏப்பிறல் 03 - வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கினை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கடன்கள் தொடர்பில் அத்தகைய கடன்களை வெளிநாட்டு நாணயத்தில் அறவிடுவது இடர்ப்பாடானதாக இருக்குமிடத்து இறுதி நடவடிக்கையாக, அவசியமானவிடத்து அத்தகைய கடனை இலங்கை ரூபாவிற்கு மாற்றி அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டுமென்பதனை அறிவிக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கின்ற 2020ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பணிப்புரை வெளியிடப்பட்டது.

2020 ஏப்பிறல் 08 - இரட்டைப் பிரசாவுரிமை பெற்றவர்கள் உட்பட இலங்கையில் வதிகின்ற அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் இலங்கையர், இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட மற்றைய நாடுகளின் பிரசைகள் மற்றும் நிதிகள், கம்பனிச் சபைகள், சங்கங்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகள் உட்பட இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆட்களுக்கு சிறப்பு வைப்புக் கணக்குகளை அறிமுகப்படுத்துவதற்காக இலக்கம் 2170/4 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது.

2020 ஏப்பிறல் 09 - சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல் மற்றும் பற்று மற்றும் வரவுகளை அனுமதித்தல் என்ற தொடர்பில் பிரமாணங்களை குறித்துரைக்கும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பணிப்புரைகள் வெளியிடப்பட்டன.

2020 ஏப்பிறல் 16 - வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை, வெளிநாட்டு நாணயத்தில் அறவிடுவது கடினமாக இருக்குமிடத்து, தேவைப்படும் பொழுது இறுதி நடவடிக்கையொன்றாக இலங்கை ரூபாவில் அறவிட்டுக் கொள்ளலாம் என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிப்பதற்காக 2020ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2020 யூலை 01 - இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வைத்திருக்கப்படக்கூடிய வெளிநாட்டு நாணயத்தில் தொகையினை முன்னர் அனுமதிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 10,000 இலிருந்து ஐ.அ.டொலர் 15,000 இற்கு அதிகரிப்பதற்காக இல. 2182/33 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது.

- சிறப்பு வைப்புக் கணக்கின் நிதியிடல் மூலத்தினை விரிவாக்குகின்ற வேளையில் சிறப்பு வைப்புக் கணக்கினை வைத்திருப்பவர்கள் அக்கணக்கிற்கெதிராக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து கடன்களைப் பெற அனுமதிக்கின்ற விதத்தில் இல.2182/ 32 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது.

2020 யூலை 02 - இல.2169/3 கொண்ட அதிவிசேட வர்த்தமானி காலாவதியாகிமையினத் தொடர்ந்து மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது மேலும் ஆறு மாத காலப்பகுதிக்குப் புதிய வழிமுறைகளை விதிப்பதற்காக இல.2182/37 கொண்ட அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

- பின்வருவன நீங்கலாக, இலங்கையில் வதியும் ஆட்களினால் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக வெளிநாட்டு முதலீடுகளுக்காகச் செய்யப்படும் வெளிமுகப் பணவனுப்பல்களுக்காக வழங்கப்பட்ட பொதுவான அனுமதி இடைநிறுத்தப்படுகிறது:

  (அ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களிலிருந்து நிதியிடப்படவுள்ள முதலீடுகள்;

  (ஆ) முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளையொன்றில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள முதலீட்டிற்கு ஏற்புடைத்தான விதத்தில் அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் செய்யப்பட வேண்டிய மேலதிக முதலீடொன்று;

  (இ) வெளிநாடுகளில் ஏற்கனவே துணை நிறுவனங்களை அல்லது கிளை அலுவலகங்களை நிறுவியுள்ள தகைமை வாய்ந்த கம்பனிகளால் மேற்கொள்ளப்படவுள்ள மேலதிக முதலீடுகளை/ நிதியத்தினை உள்ளீடாக பெறுமொருவருக்கு தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 கொண்ட தொகை;

  (ஈ) வெளிநாட்டில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள தொடர்பு அலுவலகங்கள், சந்தைப்படுத்தல், முகவராண்மை, செயற்றிட்டம், பிரதிநிதித்துவ அல்லது அதையொத்த அலுவலகங்களின் பேணல் நோக்கங்களுக்காக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரையிலான பணவனுப்பல்கள்.

- நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் மீதான எந்தவொரு தொகை வரையிலுமான பணவனுப்பல்கள் அல்லது உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரையான மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தவிர்ந்த இலங்கையில் வதியும் ஆட்களினால் வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்ட நாணயக் கணக்குகள் அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடான வெளிமுகப் பணவனுப்பல்களை தற்காலிகமாக நிறுத்துதல்.

- முதல் தடவையாக புலம்பெயர் படிகளைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமைபெற்ற புலம்பெயர்ப் படிகளை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 இற்கு மட்டுப்படுத்துதல்
- ஏற்கனவே புலம்பெயர் படிகளைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்கள் புலம்பெயர் படிகளின் கீழான நிதியங்களை வெளிநாட்டிற்கு அனுப்பும் உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 இற்கு மட்டுப்படுத்துதல்.
- பொதுவான அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்கான விசேட அனுமதியினை வழங்குகின்றமைக்காக மத்திய வங்கியின் நாணயச் சபையினது அதிகாரத்தினை மேலே (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களைத் திருப்தி செய்யுமிடத்து மாத்திரம் வழங்குவதற்கு மட்டுப்படுத்துதல்.

2020 யூலை 06 - சிறப்பு வைப்புக் கணக்குகளை திறத்தல் மற்றும் பேணுதல் மற்றும் அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் மற்றும் வரவுகள் அத்துடன் மற்றைய தேவைப்பாடுகள் தொடர்பான மேலதிகப் பிரமாணங்களைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2020 செத்தெம்பர் 23 - வதிவற்றோர் உள்முக முதலீட்டுக் கணக்குகளினூடாக வழிப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் தொடர்பாக வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளைப் பாதுகாப்பதற்கு “உள்முக முதலீட்டு பரஸ்பர பரிமாற்றல்” என்ற பெயரிலான திட்டத்தின் கீழ், ஓராண்டிற்கும் கூடுதலான மற்றும் இரண்டு ஆண்டுகள் வரையிலான புதிய ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா வாங்கல்-விற்றல் நாணய பரஸ்பர பரிமாற்றல் தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இது, நாட்டிற்குள் புதிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை ஊக்குவிக்கின்றது.

2020 ஒத்தோபர் 06 - சிறப்பு வைப்புக் கணக்குகளை குறித்துரைக்கப்பட்ட முதிர்ச்சித் திகதிக்கு அப்பாலும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வழங்கப்பட்ட வட்டி வீதங்களுடன் வழமையான கால வைப்புக்களாக புதுப்பிப்பதற்கும் அவற்றைத் தொடர்வதற்கும் அக்கால வைப்புக்களின் மீது அவற்றை எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி மாற்றவும் இலங்கைக்கு வெளியே அனுப்புவதனையும் அனுமதிக்கின்ற விதத்தில் இலக்கம் 2196/22 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று விடுக்கப்பட்டது.

2020 ஒத்தோபர் 07 - சிறப்பு வைப்புக் கணக்கு உடமையாளர் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் தொடர்ந்து பேணி வருவதற்கு தகைமையுடையவராக இருப்பதற்குட்பட்டு சிறப்பு வைப்புக் கணக்குகளின் வட்டி உட்பட முதிர்ச்சிப் பெறுகைகளை தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவாக வைப்புச் செய்வதற்கு வசதியளிப்பது பற்றி அவர்களுக்கு அறிவிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

- சிறப்பு வைப்புக் கணக்கு உடமையாளர் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றினைத் திறந்து பேணி வருவதற்கு தகைமையுடையவராக இருக்குமிடத்து சிறப்பு வைப்புக் கணக்குகளின் வட்டி உட்பட முதிர்ச்சிப் பெறுகைகளை உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவாக வைப்புச் செய்வதற்கு வசதியளிப்பது பற்றி அவர்களுக்கு அறிவிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க பணிப்புரை விடுக்கப்பட்டது.

- சிறப்பு வைப்புக் கணக்கு உடமையாளர்கள் இத்தகைய கணக்குகளைத் திறந்து பேணி வருவதற்கு தகைமையுடையவராக இருக்குமிடத்து சிறப்பு வைப்புக் கணக்கினை குறித்துரைக்கப்பட்ட முதிர்ச்சித் திகதிக்கு அப்பாலும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வழங்கப்பட்ட வட்டி வீதங்களுடன் வழமையான கால வைப்புக்களாகப் புதுப்பிப்பதற்கும் அவற்றைத் தொடர்வதற்கும் அக்கால வைப்புக்களின் முதிர்ச்சிகளின் மீது அவற்றை எவ்வித கட்டுப்பாடுமின்றி உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மாற்றல் செய்வதற்கு அனுமதிக்கின்ற விதத்தில் 2020ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

## விலைத் திருத்தங்கள்

பல்வேறு பொருட்களின் அதியுச்ச சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தப்பட்டன:

| திகதி | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| 2020.01.29 | ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய முகக்கவசம் - நெய்யாதவை (காது வளைய வகை அல்லது கட்டும் வகை) | அலகொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.15 விதிக்கப்பட்டது |
| | ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய அறுவை சிகிச்சை முகக்கவசம் - நெய்யாதவை (காது வளைய வகை அல்லது கட்டும் வகை) | அலகொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.15 விதிக்கப்பட்டது |
| | முகக்கவசம் (N 95 வகை - துகள் சுவாசக் கருவி) | அலகொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.150 விதிக்கப்பட்டது |
| 2020.02.23 | பெரிய வெங்காயம் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.78 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.190 இற்கு அதிகரிக்கப்பட்டது |
| 2020.03.12 | புறொயிலர் கோழி இறைச்சி (முழு கோழி) தோலுடன் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.430 இற்கு விதிக்கப்பட்டது |
| | புறொயிலர் கோழி இறைச்சி (முழு கோழி) தோல் நீக்கியது | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.500 இற்கு விதிக்கப்பட்டது |
| | சோளம் (எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தக்கூடியது) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.55 இற்கு விதிக்கப்பட்டது |
| 2020.03.16 | 2020.01.29 அன்று பின்வரும் மருத்துவச் சாதனங்கள் மீது விதிக்கப்பட்ட அதியுச்ச சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தப்பட்டன: | |
| | ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய அறுவை சிகிச்சை முகமூடி - மூன்று ஓடு அடுக்குகள் - நெய்யாதவை (காது வளைய வகை அல்லது கட்டும் வகை) | அலகு ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.50 இற்கு விதிக்கப்பட்டது |
| | முகமூடி - N 95 வகை - (அறுவை சிகிச்சை/ உடல் நலம்/ சுவாசம்/ மருத்துவம்) | அலகு ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.325 இற்கு விதிக்கப்பட்டது |
| 2020.03.18 | மைசூர் பருப்பு | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.130 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.65 இற்கு குறைக்கப்பட்டது |
| | பெரிய வெங்காயம் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.190 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.150 இற்கு குறைக்கப்பட்டது |
| | தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் | 425 கிறாம் தேறிய நிறைக்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.140 இலிருந்து 425 கிறாம் தேறிய நிறைக்கு ரூ.100 இற்கு குறைக்கப்பட்டது |
| 2020.03.20 | 2020.03.16 அன்று திருத்தப்பட்டவாறு 29.01.2020 அன்று மருத்துவச் சாதனங்கள் மீது விதிக்கப்பட்ட அதியுச்ச விலைகள் இரத்துச் செய்யப்பட்டன. | |
| 2020.04.10 | கீரி சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.125 விதிக்கப்பட்டது |
| | வெள்ளை/ சிவப்புச் சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (சுதுறு சம்பா நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.98 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.90 இற்கு குறைக்கப்பட்டது |
| | வெள்ளை/ சிவப்பு பச்சைச் சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.90 விதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 2020.04.10 | வெள்ளை/ சிவப்பு நாடு - நீராவியில்/ அவிக்கப்பட்டது (மொட்டைக்கருப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.98 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.90 இற்கு குறைக்கப்பட்டது |
| | வெள்ளை/ சிவப்பு பச்சை அரிசி | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.85 விதிக்கப்பட்டது |
| 2020.04.21 | மஞ்சள் தூள் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.750 விதிக்கப்பட்டது |
| 2020.04.28 | வெள்ளைச் சீனி (பொதியிடப்படாதது) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலையான ரூ.100 நீக்கப்பட்டது |
| | வெள்ளைச் சீனி (பொதியிடப்பட்டது) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலையான ரூ.105 நீக்கப்பட்டது |
| 2020.04.30 | மைசூர் பருப்பு | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலையான ரூ.65 நீக்கப்பட்டது |
| | தகரத்திலடைக்கப்பட்ட மீன் | 425 கிறாம் தேறிய நிறைக்கு அதியுச்ச சில்லறை விலையான ரூ.100 நீக்கப்பட்டது |
| 2020.05.28 | கீரி சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.125 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.120 இற்கு குறைக்கப்பட்டது |
| | வெள்ளை/ சிவப்புச் சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (சுதுறு சம்பா நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.90 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.98 இற்கு அதிகரிக்கப்பட்டது |
| | வெள்ளை/ சிவப்பு பச்சைச் சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.90 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.98 இற்கு அதிகரிக்கப்பட்டது |
| | வெள்ளை/ சிவப்பு நாடு - நீராவியில்/ அவிக்கப்பட்டது (மொட்டைக்கருப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.90 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.96 இற்கு அதிகரிக்கப்பட்டது |
| | வெள்ளை/ சிவப்பு பச்சை அரிசி | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.85 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.93 இற்கு அதிகரிக்கப்பட்டது |
| 2020.07.29 | டெங்கிற்கான என்.எஸ்.1 அன்டிஜன் சோதனை | பரிசோதனை மற்றும் அறிக்கையிடலொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.1,200 விதிக்கப்பட்டது |
| | முழுமையான இரத்தச் சோதனை | பரிசோதனை மற்றும் அறிக்கையிடலொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.400 விதிக்கப்பட்டது |
| 2020.09.23 | மஞ்சள் தூள் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.750 நீக்கப்பட்டது |
| 2020.09.25 | தேங்காய் (13” இற்கு மேற்பட்ட சுற்றளவைக் கொண்டவை) | காயொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.70 விதிக்கப்பட்டது |
| | தேங்காய் (12” - 13” இற்கு இடையிலான சுற்றளவைக் கொண்டவை) | காயொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.65 விதிக்கப்பட்டது |
| | தேங்காய் (12” இற்குக் குறைவான சுற்றளவைக் கொண்டவை) | காயொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.60 விதிக்கப்பட்டது |

## வரித் திருத்தங்கள்

### வருமான வரிகள்

### தனியாள் மற்றும் கம்பனி வருமான வரி

2020 சனவரி 01 - தனியாள் வருமான வரி வீதங்கள், வரிப் பிரிவுகள் மற்றும் வரியற்ற கீழ்மட்டங்கள் என்பன பின்வருமாறு திருத்தப்பட்டன:

| முன்னர் | | தற்பொழுது | |
|---|---|---|---|
| வரியற்ற கீழ்மட்டம் | | | |
| தொழில் முறை வருமானத்திற்காக ஆண்டொன்றிற்கு ரூ.1.2 மில்லியன், தனியாள் வருமானத்திற்காக ஆண்டொன்றிற்கு ரூ.500,000. | | எந்தவொரு வருமானத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.3 மில்லியன் | |
| வரி விதிக்கத்தக்க வருமானம் | | | |
| வரிப் பிரிவு | வரி வீதம் | வரிப் பிரிவு | வரி வீதம் |
| முதல் ரூ.600,000 | 4 | முதல் ரூ.3,000,000 | 6 |
| ரூ.600,001 - ரூ.1,200,000 | 8 | ரூ.3,000,001 - ரூ.6,000,000 | 12 |
| ரூ.1,200,001 - ரூ.1,800,000 | 12 | ரூ.6,000,000 இனை விஞ்சியவை | 18 |
| ரூ.1,800,001 - ரூ.2,400,000 | 16 | | |
| ரூ.2,400,001 - ரூ.3,000,000 | 20 | | |
| ரூ.3,000,000 விஞ்சியவை | 24 | | |

- கம்பனி வருமான வரி வீதங்கள் 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருமாறு திருத்தப்பட்டன:

  - நியம கம்பனி வருமான வரி வீதம் 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
  - கட்டடவாக்க கைத்தொழிலுக்குப் பிரயோகிக்கத்தக்க கம்பனி வருமான வரி வீதம் 28 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது
  - உற்பத்தி கைத்தொழிலுக்குப் பிரயோகிக்கத்தக்க கம்பனி வருமான வரி வீதம் 18 சதவீதத்திற்குத் திருத்தப்பட்டது.

### உழைக்கும் போதே செலுத்தும் வரி

2020 சனவரி 01 - வதிவோர் அல்லது வதிவற்ற நபருக்கான தொழில்நிலைப் பெறுகைகள் மீதான உழைக்கும் போதே செலுத்தும் வரி நீக்கப்பட்டது.

### உயர் தனியாள் வருமான வரி

2020 ஏப்பிறல் 01 - உழைக்கும் போதே செலுத்தும் வரிக்குப் பதிலாக விருப்பத்தேர்வு அடிப்படையில் உயர் தனியாள் வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆண்டொன்றிற்கு ரூ.3 மில்லியனை விஞ்சிய வருமானத்தினைப் பெறும் ஊழியர்கள் ஒவ்வொரு பிரிவிற்குமாக ரூ.3 மில்லியனுக்கான வரி பிரிவுகளுக்குட்பட்டு 6 மற்றும் 12 சதவீதங்களில் உயர் தனியாள் வருமான வரியினைத் திருத்துவதற்கும் செலுத்துவதற்கும் அதன் பின்னர் வருமானம் ரூ.9 மில்லியனை விஞ்சும் பொழுது 18 சதவீதத்தினைச் செலுத்துவதற்கும்

பொறுப்புடையவர்களாவர். உயர் தனியாள் வருமான வரி வதியும் ஊழியரின்[3] அத்தகைய ஊழியரின் சம்மதத்துடன் ஊதியத்திலிருந்து கழிக்கப்படுவதுடன் வதியும் ஊழியர் எவரேனும் உயர் தனியாள் வருமான வரியினை செலுத்த மறுக்குமிடத்து ஏற்புடைத்தான வரிப் பிரிவுகள் மற்றும் வீதங்களின் அடிப்படையில் தனியாள் வருமான வரியினைச் செலுத்துவதற்கு பொறுப்புடையவராவர். வதிவற்ற ஊழியர்களைப் பொறுத்தவரையில் உயர் தனியாள் வருமான வரிகள் அத்தகைய ஊழியர்களின் சம்மதத்தினைப் பொருட்படுத்தாது தொடர்பான ஊழியர்களின் ஊதியத்திலிருந்து கழிக்கப்படுகிறது.

## பிடித்துவைத்தல் வரி

2020 சனவரி 01 - பின்வருவனவற்றைத் தவிர எந்தவொரு வதியும் நபருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளின் மீதான பிடித்துவைத்தல் வரி நீக்கப்பட்டது:

- அதிர்ஷ்டலாபம், வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் ஆகியவற்றிலிருந்து வென்றதாகச் செலுத்தப்பட்ட தொகையின் 14 சதவீத வீதத்திலான பிடித்துவைத்தல் வரி
- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண சபையினால் நடத்தப்படுகின்ற ஏலத்தினது ஏதேனும் இரத்தினக்கல் விற்பனையின் மீதான 2.5 சதவீத வீதத்திலான பிடித்துவைத்தல் வரி
- 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 84, 85ஆம் பிரிவுகளின் கீழ் எந்தவொரு வதிவற்ற நபருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தல் வரி

2020 மாச்சு 31 - 2020 பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களுக்காக முறையே 2020 மாச்சு 15 மற்றும் 2020 ஏப்பிறல் 15 அன்று செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் வரிக் கொடுப்பனவுகளின் காலக்கேடுகள் 2020 ஏப்பிறல் 30 வரை நீடிக்கப்பட்டன.

## பொருளாதாரப் பணிக் கட்டணம்

2020 சனவரி 01 - 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொருளாதாரப் பணிக் கட்டணம் நீக்கப்பட்டது

## வருமான வரி விலக்களிப்புக்கள்

2020 சனவரி 01 - தகவல்தொழில்நுட்பம் மற்றும் பணிகளை இயலுமைப்படுத்தல் போன்றவற்றிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானம்

- வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம், அத்தகைய பணிகளுக்கான கொடுப்பனவுகள் ஒரு வங்கி மூலம் வெளிநாட்டு நாணயத்தில் கிடைக்கப்பெற்றால் அது உள்ளடங்கலாக இலங்கைக்கு வெளியேயுள்ளவர்களுக்கு வழங்கப்படும் பணிகளிலிருந்து உழைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம்
- வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றம் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம்
- ஏதேனும் வதிவற்றோருக்கு வதிவுடைய கம்பனியால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள்
- வர்த்தக மைய தொழிற்பாட்டாளர்களால் பகிர்ந்தளிக்கப்படும் பங்கிலாபங்கள்
- ஆய்வுகூடப் பணிகள் அல்லது நியமசான்றிதழ் பணிகளிலிருந்து வதிவற்ற நபரால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள்
- ஏதேனும் மத நிறுவனங்களால் மானியங்கள் மற்றும் நன்கொடைகள் மூலம் பெறப்பட்ட தொகைகள்

3 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில்.

## பெறுமதிசேர் வரி

2020 சனவரி 01 - பெறுமதிசேர் வரியின் பதிவுக்கான எல்லையை ஆண்டொன்றிற்கு ரூ.12 மில்லியனிலிருந்து ரூ.300 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

- தகவல்தொழில்நுட்பம் மற்றும் இயலுமைப்படுத்தும் பணிகள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

2020 மாச்சு 23 - 2020 பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களுக்காக முறையே 2020 மாச்சு 20 மற்றும் 2020 ஏப்பிறல் 20 அன்று செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவுகளின் காலக்கேடுகள் 2020 ஏப்பிறல் 30 வரை நீடிக்கப்பட்டன.

## கலால் தீர்வை

2020 ஏப்பிறல் 30 - எதையில் மதுசாரம் மீதான கலால் வரி பின்வருமாறு திருத்தப்பட்டது:

<table>
<tr><th rowspan="2">விடயம்</th><th rowspan="2">உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை/ இறக்குமதி செய்யப்பட்டவை மாதமொன்றிற்கு லீற்றர்</th><th colspan="2">2016.03.02 இலிருந்து தற்பொழுதுள்ள வரி (தொகை வடிவிலான லீற்றர் ஒன்றிக்கு ரூ.)</th><th colspan="2">2020.04.30 இலிருந்து வரித் திருத்தம் (தொகை வடிவிலான லீற்றர் ஒன்றிக்கு ரூ.)</th></tr>
<tr><th>உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை</th><th>இறக்குமதி செய்யப் பட்டவை</th><th>உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை</th><th>இறக்குமதி செய்யப் பட்டவை</th></tr>
<tr><td rowspan="4">அரசாங்கத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வியல் நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் அரச திணைக்களங்களினால் பயன்படுத்தப்பட்ட எதையில் மதுசாரம்</td><td>10,000 லீற்றர் வரை</td><td rowspan="2">வரியில்லை</td><td rowspan="2">வரியில்லை</td><td rowspan="4">வரியில்லை</td><td rowspan="2">வரியில்லை</td></tr>
<tr><td>சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவிற்கான 20,000 லீற்றர் வரை</td></tr>
<tr><td>10,001 லீற்றலிருந்து 20,000 லீற்றர் வரையான</td><td>600</td><td>700</td><td>700</td></tr>
<tr><td>20,000 லீற்றருக்கு மேல்</td><td>1,000</td><td>1,100</td><td>1,100</td></tr>
<tr><td rowspan="4">மருந்துப்பொருள் உற்பத்தி மற்றும் கைத்தொழில் உற்பத்தி என்பனவற்றில் பயன்படுத்தப்பட்ட எதையில் மதுசாரம். இதில் இறுதி உற்பத்திகள் கலால் தீர்வைகளுக்குட்படவில்லை</td><td>500 லீற்றர் வரை</td><td>வரியில்லை</td><td>200</td><td>வரியில்லை</td><td>200</td></tr>
<tr><td>501 லீற்றலிருந்து 10,000 லீற்றர் வரையான</td><td>600</td><td>700</td><td>100</td><td>700</td></tr>
<tr><td>10,001 லீற்றலிருந்து 20,000 லீற்றர் வரையான</td><td>700</td><td>800</td><td>150</td><td>800</td></tr>
<tr><td>20,000 லீற்றருக்கு மேல்</td><td>1,100</td><td>1,200</td><td>200</td><td>1,200</td></tr>
<tr><td rowspan="4">ஏற்றுமதிகளுக்கான உற்பத்திகளின் தயாரிப்பு அல்லது பொறி-களைக் கழுவுதல் மற்றும் ஏற்றுமதிகளுக்கான அத்தகைய உற்பத்திகளுக்குப் பயன்படுத்தப்பட்ட எதையில் மதுசாரம். இதில் இறுதி உற்பத்திகள் கலால் தீர்வைகளுக்குட்படவில்லை</td><td>500 லீற்றர் வரை</td><td>வரியில்லை</td><td>வரியில்லை</td><td>வரியில்லை</td><td>வரியில்லை</td></tr>
<tr><td>501 லீற்றலிருந்து 10,000 லீற்றர் வரையான</td><td>600</td><td>700</td><td>100</td><td>700</td></tr>
<tr><td>10,001 லீற்றலிருந்து 20,000 லீற்றர் வரையான</td><td>700</td><td>800</td><td>150</td><td>800</td></tr>
<tr><td>20,000 லீற்றருக்கு மேல்</td><td>1,100</td><td>1,200</td><td>200</td><td>1,200</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுத்திகரிக்கப்படாத எதையில் மதுசார திரவம் (தொழில்நுட்பத் திரவம்/ செறிவு குறைந்த திரவம் | ஒவ்வொரு லீற்றருக்கும் | 400 | 1,100 | 75 | 1,100 |
| மதுசாரத் தயாரிப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற எதையில் மதுசாரம் | ஒவ்வொரு லீற்றருக்கும் | 10 | 10 | 10 | 10 |

2020 யூன் 09 - எதையில் மதுசாரம் மீதான கலால் வரி பின்வருமாறு திருத்தப்பட்டது:

| விடயம் | உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை/ இறக்குமதி செய்யப்பட்டவை மாதமொன்றிற்கு லீற்றர் | வரித் திருத்தம் (தொகை வடிவிலான லீற்றர் ஒன்றிக்கு ரூ.) | |
|---|---|---|---|
| | | உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை | இறக்குமதி செய்யப்பட்டவை |
| மருந்தாக்கல் மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற எதையில் மதுசாரம். இதில் இறுதி உற்பத்திகள் கலால் தீர்வைகளுக்குட்படவில்லை (தொற்று நீக்கிகளின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட எதையில் மதுசாரம் தவிர) | 500 லீற்றர் வரை | வரியில்லை | 200 |
| | 501 லீற்றலிருந்து 10,000 லீற்றர் வரையான | 100 | 700 |
| | 10,001 லீற்றலிருந்து 20,000 லீற்றர் வரையான | 150 | 800 |
| | 20,000 லீற்றருக்கு மேல் | 200 | 1,200 |
| பின்வரும் உற்பத்திகளுக்குப் பயன்படுத்தப்பட்ட எதையில் மதுசாரம் | | | |
| 2020.03.30 இலிருந்து 2020.08.15 வரையான காலப்பகுதியில் உள்ளூர் விற்பனைக்கான தொற்று நீக்கி | 500 லீற்றர் வரை | வரியில்லை | 200 |
| | 501 லீற்றலிருந்து 10,000 லீற்றர் வரையான | | 700 |
| | 10,001 லீற்றலிருந்து 20,000 லீற்றர் வரையான | | 800 |
| | 20,000 லீற்றருக்கு மேல் | | 1,200 |
| ஏற்றுமதிக்கான தொற்று நீக்கி | ஒவ்வொரு லீற்றருக்குமான | வரியில்லை | 25 |

## கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) தீர்வை

2020 யூன் 02 - தாவர எண்ணெய், கொழும்பு அமிலம் மற்றும் விலங்குக் கொழுப்பு அமிலம் என்பன மீதான கலால் தீர்வை 20 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட இனிப்பூட்டப்பட்ட குடிபானங்களின் மீதான கலால் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது:

| விடயம் | 2019.03.06 இலிருந்து தற்பொழுதுள்ள வரி | 2020.08.22 இலிருந்து வரித் திருத்தம் |
|---|---|---|
| கனிம நீர் மற்றும் காற்றூட்டப்பட்ட நீர் என்பன உள்ளிட்ட சீனி சேர்க்கப்பட்ட அல்லது இனிப்பூட்டப்பட்ட அல்லது சுவையூட்டப்பட்ட நீர் வகை | ஒவ்வொரு லீற்றருக்கும் ரூ.12 அல்லது உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 4 கிறாம் நீங்கலாக ஒவ்வொரு கிறாம் சீனிக்கும் 40 சதம் | ஒவ்வொரு லீற்றருக்கும் ரூ.12 அல்லது உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 6 கிறாம் நீங்கலாக ஒவ்வொரு கிறாம் சீனிக்கும் 30 சதம் இதில் எது உயர்வானதோ அது |

| | | |
|---|---|---|
| “சக்தி குடிவகை” என சில்லறை விற்பனைகளுக்கு விடப்பட்டுள்ள குடிபானங்கள் | ஒவ்வொரு லீற்றருக்கும் ரூ.12 அல்லது உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 4 கிறாம் நீங்கலாக ஒவ்வொரு கிறாம் சீனிக்கும் 40 சதம் | ஒவ்வொரு லீற்றருக்கும் ரூ.12 அல்லது உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 6 கிறாம் நீங்கலாக ஒவ்வொரு கிறாம் சீனிக்கும் 30 சதம் இதில் எது உயர்வானதோ அது |
| பழவகை அல்லது காய்கறிச் சாறுகளை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்கள் - ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 6 கிறாமிற்கும் கூடுதலான சீனியை உள்ளடக்கியவை | ஒவ்வொரு லீற்றருக்கும் ரூ.12 அல்லது உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 8 கிறாம் நீங்கலாக ஒவ்வொரு கிறாம் சீனிக்கும் 40 சதம் | ஒவ்வொரு லீற்றருக்கும் ரூ.12 அல்லது உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 9 கிறாம் நீங்கலாக ஒவ்வொரு கிறாம் சீனிக்கும் 30 சதம் இதில் எது உயர்வானதோ அது |
| ஏனையவை - ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 6 கிறாமிற்கும் கூடுதலான சீனியை உள்ளடக்கியவை | ஒவ்வொரு லீற்றருக்கும் ரூ.12 அல்லது உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 8 கிறாம் நீங்கலாக ஒவ்வொரு கிறாம் சீனிக்கும் 40 சதம். இதில் எது உயர்வானதோ அது | ஒவ்வொரு லீற்றருக்கும் ரூ.12 அல்லது உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு 100 மி.லீற்றருக்கும் 9 கிறாம் நீங்கலாக ஒவ்வொரு கிறாம் சீனிக்கும் 30 சதம் இதில் எது உயர்வானதோ அது |

## சுங்கத் தீர்வை

பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது

| விடயம் | திகதி | சுங்க இறக்குமதித் தீர்வை (லீற்றரொன்றிற்கு ரூ.) | சுங்கத் தீர்வை விலக்கல் (லீற்றரொன்றிற்கு ரூ.) | ஏற்புடைத்தான தீர்வை (லீற்றரொன்றிற்கு ரூ.) | மேலதிகக் கட்டணம் (சுங்கத் தீர்வையின் சதவீதமாக) (லீற்றரொன்றிற்கு ரூ.) |
|---|---|---|---|---|---|
| பெற்றோல் (92 ஒக்ரேன்) | 11.09.2019 | 35.00 | 17.00 | 18.00 | - |
| | 14.03.2020 | 35.00 | 5.00 | 30.00 | - |
| | 23.04.2020 | 50.00 | - | 50.00 | 26.00 (அ) |
| | 30.06.2020 | 50.00 | 6.00 | 44.00 | - |
| | 17.09.2020 | 50.00 | 11.00 | 39.00 | - |
| பெற்றோல் (95 ஒக்ரேன்) | 28.12.2018 | 35.00 | - | 35.00 | - |
| | 14.03.2020 | 35.00 | - | 35.00 | 15.00 (அ) |
| | 23.04.2020 | 50.00 | - | 50.00 | 49.00 (அ) |
| | 24.06.2020 | 50.00 | - | 50.00 | 20.00 (அ) |
| | 30.06.2020 | 50.00 | 6.00 | 44.00 | |
| | 24.08.2020 | 50.00 | 6.00 | 44.00 | 20.00 (ஆ) |
| தன்னியக்க டீசல் | 12.01.2019 | 5.85 | 3.00 | 2.85 | - |
| | 14.03.2020 | 5.85 | - | 5.85 | 11.00 (அ) |
| | 23.04.2020 | 25.00 | - | 25.00 | 24.00 (அ) |
| | 24.06.2020 | 25.00 | - | 25.00 | 12.00 (அ) |
| | 30.06.2020 | 25.00 | 7.00 | 18.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தன்னியக்க டீசல் | 24.08.2020 | 25.00 | 7.00 | 18.00 | 12.00 (ஆ) |
| | 17.09.2020 | 25.00 | 8.00 | 17.00 | |
| சிறப்பு டீசல் | 11.07.2019 | 15.00 | - | 15.00 | - |
| | 14.03.2020 | 15.00 | - | 15.00 | 20.00 (அ) |
| | 23.04.2020 | 25.00 | - | 25.00 | 40.00 (அ) |
| | 24.06.2020 | 25.00 | - | 25.00 | 30.00 (அ) |
| | 30.06.2020 | 25.00 | 5.00 | 20.00 | |
| | 24.08.2020 | 25.00 | 5.00 | 20.00 | 30.00 (ஆ) |

(அ) இரண்டு மாத காலப்பகுதிக்கு நடைமுறையிலிருக்கும்

(ஆ) மூன்று மாத காலப்பகுதிக்கு நடைமுறையிலிருக்கும்

2020 சனவரி 14 - கோதுமை மா மீதான தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.13 ஆக விதிக்கப்பட்டு ஏற்புடைத்தான தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.3 ஆக மாற்றப்பட்டது.

2020 ஏப்பிறல் 10 - உராய்வு நீக்கிகளின் (உந்து ஊர்திகளுக்குப் பயன்படுத்துபடுபவை) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

2020 ஏப்பிறல் 17 - மீன் உற்பத்திகள், தோடம்பழ வகை, தானிய உற்பத்திகள், மா, காய்கறிகள் மற்றும் பழச்சாறுகள் உள்ளிட்ட பழ உற்பத்திகள், தேயிலை மற்றும் கோப்பி வகைகளின் சாரம் மற்றும் புகையிலை உற்பத்திகள் என்பனவற்றின் மீதான சுங்கத் தீர்வைகள் 25 - 50 வீத வீச்சிற்குள் அதிகரிக்கப்பட்டன.

2020 யூன் 19 - இடை அமைச்சு செயலணிக் குழுவினால் (கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி) விதந்துரைக்கப்பட்ட தீர்வைத் திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- வில்லுகள் மற்றும் வில்லுத்தகடுகள் மீதான சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

2020 செத்தெம்பர் 23 - விலங்கு உற்பத்தி மற்றும் பண்ணை ஊக்குவிப்பு மற்றும் முட்டை தொடர்பான கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆகியோரின் விதந்துரைப்புக்களின் மீது உள்ளூர் விலங்கு வளர்ப்பு வேளாண்மையாளர்களுக்கு பதனிடப்பட்ட உணவினை வழங்குகின்ற பதனிடல் உணவுகளைத் தயாரிக்கின்ற நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீதான சுங்கத் தீர்வையின் மீது 15 சதவீதம் கொண்ட பொதுவான தீர்வைத் தள்ளுபடியொன்று வழங்கப்பட்டது.

## செஸ் தீர்வை

2020 சனவரி 14 - கோதுமை மா மீதான கி.கிறாமொன்றிற்கு ரூ.15 செஸ் தீர்வை நீக்கப்பட்டது.

2020 மே 20 - இலங்கை முதலீட்டுச் சபை, நலக் கவனிப்பு மற்றும் சுதேச மருத்துவப் பணிகள் அமைச்சு, சுகாதாரப் பணிகள் திணைக்களம், முப்படைகள், இலங்கை பொலிஸ் மற்றும் கொவிட் நிலையம் (கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தடுப்பதற்கான தேசிய தொழிற்பாட்டு மையம்) என்பனவற்றுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள ஏதேனும் ஏற்றுமதி சார்ந்த தொழில்முயற்சிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட சுகாதாரப் பாதுகாப்புச் சாதனங்கள் மற்றும் அவை போன்ற உற்பத்திகளின் வழங்கல் அல்லது அன்பளிப்பு மீதான செஸ் தீர்வை அவற்றின் கோரிக்கையின் மீது விலக்கப்பட்டது.

- மருத்துவ அறுவை மற்றும் பற் சிகிச்சைச் சாதனங்கள், கருவிகள், துணைப்பொருட்கள் அவற்றுடன் தொடர்பான பாகங்கள் என்பனவற்றினை உள்ளடக்கிய பொறிகள் மற்றும் சாதனங்கள், வைத்தியசாலை/மருத்துவத் தளபாடங்கள் மற்றும் மருந்துகள், இரசாயனங்கள் மற்றும் அதனையொத்த பொருட்கள் நாட்டின் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரப் பணிகளின் ஏற்பாடுகளுக்குத் தேவையான பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி

செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்டு சுகாதார நலக் கவனிப்பு மற்றும் சுதேச மருத்துவ பணிகள் அமைச்சின் செயலாளருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களுக்கு செஸ் தீர்வையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது. இவ்விலக்களிப்பு மேற்குறிப்பிட்ட பொருட்களின் ஏதேனுமொரு பகுதிக்கு/ சரக்கிற்கு வழங்கப்படக்கூடாது என்பதுடன் இது 2020 திசெம்பர் 31 வரை நடைமுறையிலிருக்கும்.

2020 யூன் 03/யூலை 01 - பின்வரும் விடயங்கள் மீதான செஸ் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது:

| விடயம் | 2017.11.28 இலிருந்து தற்பொழுதுள்ள வரி (சதவீதம்) | 2020.06.03 இலிருந்து வரித் திருத்தம் (கி.கிறாமொன்றிற்கு ரூ.) | 2020.07.01 இலிருந்து வரித் திருத்தம் (கி.கிறாமொன்றிற்கு ரூ.) |
|---|---|---|---|
| சிமெந்து சூளைக்கற்கள் | - | 1.00 | - |
| போட்லன்ட் சிமெந்து, வெள்ளை சிமெந்து செயற்கையில் முறையில் நிறமூட்டப்பட்டவை அல்லது மற்றையவை | 8.0 | 3.00 | 2.00 |
| நீர்புகாத சிமெந்து, பொயிலர் சிமெந்து மற்றும் அதையொத்த கூட்டுக்கள் | 8.0 | 3.00 | 2.00 |
| 50 கி.கிறாம் அல்லது அதற்கும் குறைவாகப் பொதியிடப்பட்ட வடிவில் இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய போட்லன்ட் சிமெந்து | 14.0 | 5.00 | 3.00 |
| 50 கி.கிறாம் அல்லது தொகை வடிவில் பொதியிடப்பட்ட வடிவில் இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய போட்லன்ட் சிமெந்து | 8.0 | 3.00 | 2.00 |

2020 யூலை 01 - தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீது செஸ் தீர்வை விதிக்கப்பட்டது. அதேவேளை, தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

## சிறப்புப் பண்டத் தீர்வை[4]

பல பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது:

| திகதி | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| 2020.01.25 | உருளைக்கிழங்கு | கி.கிறாமொன்றிற்கு ரூ.25 சிறப்புப் பண்டத் தீர்வை 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.02.02 | பெரிய வெங்காயம், கடலை வகை (முழு மற்றும் உடைத்தவை), சிவப்பு பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்ந்தது), தோடம்பழம் (உடன்), அப்பிள் (உடன்), சோளம், காய்கறி எண்ணெய், பீற் மற்றும் கரும்புச்சீனி, வெள்ளைப் பளிங்குருவான கரும்புச் சீனி மற்றும் வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | சிறப்புப் பண்டத் தீர்வை 06 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.02.07 | மீன் (உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்டவை) | சிறப்புப் பண்டத் தீர்வை 03 மாத காலப்பகுதிக்குக் குறைக்கப்பட்டது |
| 2020.02.25 | உருளைக்கிழங்கு | கி.கிறாமொன்றிற்கு ரூ.25 சிறப்புப் பண்டத் தீர்வை 31 நாட்கள் காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |

4 2020 ஒத்தோபர் 14 வரையான சிறப்புப் பண்டத் தீர்வை மாற்றங்களை உள்ளடக்கியது.

| | | |
|---|---|---|
| 2020.03.04 | மீன் (உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்டவை) | சிறப்புப் பண்டத் தீர்வை 06 மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இலிருந்து 10 சதவீதத்திற்கு அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ.150 இற்கு, இதில் எது உயர்வானதோ அதற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2020.03.08 | மெக்கரல், உழுந்து, தட்டைப்பயறு மற்றும் குரக்கன் | சிறப்புப் பண்டத் தீர்வை 06 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.03.13 | மீன் (உடன், குளிரூட்டப்பட்டவை அல்லது உறைய வைக்கப்பட்டவை) - மீன் சுவையாகப் பயன்படுத்தப்படுவதற்கு | 2020 மாச்சு 04ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கப்பலில் ஏற்றப்பட்டுள்ளவற்றின் இறக்குமதியை கப்பலேற்றும் பத்திரத்தின் மூலம் உறுதிப்படுத்துவதற்கும் மீன்பிடி மற்றும் நீரியல் மூலவளங்கள் அமைச்சின் விதந்துரைப்பிற்குட்பட்டு சிறப்புப் பண்டத் தீர்வை 10 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ.150 பிரயோகிக்கப்பட்டதிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.25 சேகரிக்கப்பட்ட பின்னரான மீதித் தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 2020.03.18 | மீன் (உடன், குளிரூட்டப்பட்டவை அல்லது உறைய வைக்கப்பட்டவை) | 2020 மாச்சு 04ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கப்பலில் ஏற்றப்பட்டுள்ளவற்றின் இறக்குமதியை கப்பலேற்றும் பத்திரத்தின் மூலம் உறுதிப்படுத்துவதற்கும் மீன்பிடி மற்றும் நீரியல் மூலவளங்கள் அமைச்சின் விதந்துரைப்பிற்குட்பட்டு சிறப்புப் பண்டத் தீர்வை 10 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ.150 பிரயோகிக்கப்பட்டதிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.25 சேகரிக்கப்பட்ட பின்னரான மீதித் தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 2020.03.19 | தொற்றுநீக்கிகள் மற்றும் முகக்கவசம் | கி.கிறாமொன்றிற்கு ரூ.1 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது |
| 2020.03.27 | உருளைக்கிழங்கு | கி.கிறாமொன்றிற்கு ரூ.25 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.04.10 | மரக்கறி எண்ணெய் | சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது |
| 2020.04.17 | தோடம்பழங்கள் (உடன் மற்றும் உலர்த்தியவை), திராட்சை (உடன் மற்றும் உலர்த்தியவை), அப்பிள் (உடன்), பியர்ஸ் (உடன்), செரி மற்றும். உலர்ந்த திராட்சை மற்றும் சிலோஸ் பழவர்க்கங்கள் | சிறப்புப் பண்டத் தீர்வை இரண்டு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது |
| | தோடம்பழ வகை (உடன் மற்றும் உலர்த்தியவை), போம்லஸ் உட்பட திராட்சை (உடன் மற்றும் உலர்த்தியவை) எலுமிச்சை (உடன் மற்றும் உலர்த்தியவை), குயின்ஸஸ், அப்பிறிகோட், புளிப்பான செறிஸ் (புறுனஸ் செறஸஸ்) மற்றும் பீச்சஸ் (நெக்ரறன்ஸ் உட்பட) | சிறப்புப் பண்டத் தீர்வை இரண்டு மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது |
| | தேங்காயெண்ணெய் | கி.கிறமொன்றிற்கு சிறப்புப் பண்டத் தீர்வை ரூ.295 இலிருந்து ரூ.195 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது |
| 2020.05.01 | பெரிய வெங்காயம் | கி.கிறமொன்றிற்கு சிறப்புப் பண்டத் தீர்வை ரூ.1 இலிருந்து ரூ.15 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது |
| 2020.05.08 | நெத்தலி, கருவாடு, பயறு (பாசிப்பயறு), மங்குஸ்தான் (உடன் மற்றும் உலர்த்தியவை) மற்றும் கிவ்வி பழம் | சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 2020.05.22 | யோகட், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், உள்ளி, பீஸ் (உடைத்தவை), கடலை வகை (முழு மற்றும் உடைத்தவை), சிவப்புப் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), தோடம்பழம் (உடன்), எலுமிச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), திராட்சை (உடன்), அப்பிள் (உடன்), குயின்சஸ் (உடன்), மிளகாய் (உலர்த்தியவை, நொருக்கப்படவோ அல்லது அரைக்கப்பட்டவை அல்லாதவை), சோளம், நிலக்கடலை (கோதுடன்), தேங்காயெண்ணெய் தவிர்ந்த மரக்கறி எண்ணெய், மாஜறின், தகரத்திலடைக்கப்பட்ட மீன், பீற் மற்றும் கரும்புச் சீனி, வெள்ளைப் பளிங்குருவான கரும்புச்சீனி மற்றும் வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது |
| | தோடம்பழம் (உலர்த்தியவை), திராட்சை (உலத்தியவை) மற்றும் தேங்காயெண்ணெய் | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது |
| | ஜக் மற்றும் கோஸ் மக்கரல் | கி.கிறமொன்றிற்கு சிறப்புப் பண்டத் தீர்வை ரூ.150 அல்லது 10 சதவீதத்திலிருந்து கி.கிறமொன்றிற்கு ரூ.6 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது |
| | பீஸ் (முழுமையான), மிளகாய் (நொறுக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை), சின்னச்சீரகம், வெந்தயம் மற்றும் முகக்கவசம் | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.06.17 | மரக்கறிக் கொழுப்பு மற்றும் எண்ணெய் மற்றும அவற்றின் பிரிவுகள் மற்றும் மாஜரீன் (ஏனையவை) | கி.கிறமொன்றிற்கு ரூ.600 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது |
| | தோடம்பழ வகை (உடன் மற்றும் உலர்த்தியவை), போம்லஸ் உட்பட திராட்சை (உடன் மற்றும் உலர்த்தியவை), பியர்ஸ், அப்பிறக்கோட், புளிப்பான செரி (புறூனஸ் செரசஸ்), செரி (ஏனையவை), பீச்சஸ் (நெக்ரறன்ஸ் உட்பட), உலர்ந்த திராட்சை மற்றும் சுலோஸ் | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.06.27 | மரக்கறி எண்ணெய் (தேங்காய் எண்ணெய் தவிர), மரக்கறி கொழும்பு மற்றும் எண்ணெய் மற்றும் அவற்றின் பிரிவுகள் மற்றும் மாஜரீன் (ஏனையவை) | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது |
| | தேங்காய் எண்ணெய் | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது |
| 2020.07.11 | தேங்காய் எண்ணெய் | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது |
| 2020.07.19 | மாசிக் கருவாடு, தரமிடப்பட்டது அல்லது தூளாக்கப்பட்ட வெண்ணெய் கட்டிகள், கொத்தமல்லி, மஞ்சள் (நொறுக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை அல்லாதவை அல்லது ஏனையவை) | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| | உழுத்தமா | கி.கிறமொன்றிற்கு சிறப்புப் பண்டத் தீர்வை ரூ.200 இலிருந்து கி.கிறமொன்றிற்கு ரூ.325 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது |
| 2020.08.01 | நெத்தலி, கருவாடு, பயறு (பாசிப்பயறு), மங்குஸ்தான் (உடன் மற்றும் உலர்த்தியவை) மற்றும் கிவ்வி பழம் | சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 2020.08.01 | பெரிய வெங்காயம் | கி.கிறமொன்றிற்கு சிறப்புப் பண்டத் தீர்வை ரூ.15 இலிருந்து கி.கிறமொன்றிற்கு ரூ.50 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது |
| 2020.08.15 | உருளைக்கிழங்கு | கி.கிறமொன்றிற்கு சிறப்புப் பண்டத் தீர்வை ரூ.50 இலிருந்து கி.கிறமொன்றிற்கு ரூ.55 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது |
| 2020.08.22 | ஜக் மற்றும் கோஸ் மக்கரல் | கி.கிறமொன்றிற்கு ரூ.6 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.09.04 | மீன் (உடன், குளிரூட்டப்பட்டவை அல்லது உறைய வைக்கப்பட்டவை), மக்கரல், ஜக் மற்றும் கோஸ் மக்கரல், உழுந்து, தட்டைப்பயறு மற்றும் விதை மற்றும் ஏனைய குரக்கன் | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.10.01 | வெண்ணெய்க் கட்டி, பாற்பரவற்பொருட்கள், வெந்தயம், குரக்கன் மா, கடுகு மற்றும் உப்பு | சிறப்புப் பண்டத் தீர்வை ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.10.14 | பெரிய வெங்காயம், சிவப்பு பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), தகரலத்திலடைக்கப்பட்ட மீன், பீற் மற்றும் கரும்புச்சீனி, வெள்ளை பளிங்குருவான கரும்புச் சீனி மற்றும் வெள்ளை பளிங்குருவான பீற் சீனி | சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறமொன்றிற்கு ரூ.25 சதத்திற்கு மூன்று மாத காலப்பகுதிக்குக் குறைக்கப்பட்டது. |

## துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை

2020 பெப்புருவரி 25 - சிமெந்து சூளைக்கற்கள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை 10 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

2020 ஏப்பிறல் 16 - சுகாதார சாதனங்கள் மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் மற்றும் சுகாதார நலக் கவனிப்பு மற்றும் சுதேச மருத்துவ பணிகள் அமைச்சின் செயலாளருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட மருத்துவ தளபாடங்கள் என்பன மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வைகள் விலக்கப்பட்டன.

2020 ஏப்பிறல் 23 - உருக்குத் தொழில்துறையுடன் தொடர்பான மூலப்பொருட்களின் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டன.

2020 மே 19 - ஏதேனும் தகைமையுடைய ஏற்றுமதி சார்ந்த தொழில்முயற்சிகளினால் வழங்கப்பட்ட அல்லது அன்பளிப்புச் செய்யப்பட்ட சுகாதாரப் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் அதையொத்த உற்பத்திகளின் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை விலக்கப்பட்டன.

- மருத்துவ அறுவை மற்றும் பற் சிகிச்சைச் சாதனங்கள், கருவிகள், துணைப்பொருட்கள் அவற்றுடன் தொடர்பான பாகங்கள் என்பனவற்றினை உள்ளடக்கிய பொறிகள் மற்றும் சாதனங்கள், வைத்தியசாலை/மருத்துவத் தளபாடங்கள் மற்றும் மருந்துகள், இரசாயனங்கள் மற்றும் அதனையொத்த பொருட்கள் நாட்டின் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரப் பணிகளின் ஏற்பாடுகளுக்குத் தேவையான பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்டு சுகாதார நலக் கவனிப்பு மற்றும் சுதேச மருத்துவ பணிகள் அமைச்சின் செயலாளருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களுக்கு துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது. இவ்விலக்களிப்பு மேற்குறிப்பிட்ட பொருட்களின் ஏதேனுமொரு பகுதிக்கு/சரக்கிற்கு வழங்கப்படக்கூடாது என்பதுடன் இது 2020 திசெம்பர் 31 வரை நடைமுறையிலிருக்கும்.

2020 மே 26 - மருந்தாக்கல் பொருட்களின் தயாரிப்பிற்காக மருந்தாக்கல் தயாரிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்களின் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை விலக்கப்பட்டது.

2020 செத்தெம்பர் 03 - தெரிவுசெய்யப்பட்ட பொறிகள், பொறித் தொகுதிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை 5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

## ஏனைய வரிகளும் மற்றும் தீர்வைகளும்

2020 சனவரி 01 - படுகடன் மீள்செலுத்தல் தீர்வை நீக்கப்பட்டது.

2020 மாச்சு 23 - 2020 ஏப்பிறல் 15 செலுத்தப்பட வேண்டிய 2020இன் முதலாம் காலாண்டிற்கான முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவின் காலக்கேடு 2020 ஏப்பிறல் 30 வரை நீடிக்கப்பட்டது.

## அரச செலவினம்

2020 சனவரி 08 - 2020இன் சிறுபோக ஆரம்பத்திலிருந்து நெல் பயிர்செய்யும் வேளாண்மையாளர்களுக்கு உயர்ந்தபட்சம் 2 ஹெக்டேயர் வரை இலவசமாக யூரியா, றிப்பிள் சுப்பர் பொசுபேற்று (டி.எஸ்.பி) மற்றும் முறியேற் ஒவ் பொட்டாஸ் என்பன விதந்துரைக்கப்பட்ட அளவுகளில் வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளது.

2020 பெப்புருவரி 14 - தேசிய கூலிக் கொள்கையினை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றிற்காக அரசிற்கு ஆலோசனை மற்றும் உதவிசெய்வதற்கு தேசிய ஊதிய ஆணைக்குழு நிறுவப்பட்டது.

2020 யூன் 19 - அரச பணிகளிலுள்ள மருத்துவ அலுவலர்களின் கட்டாய ஓய்வூதிய வயது 2020 மே 20ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அறுபத்தொரு வயதிற்கு நீடிக்கப்பட்டது.

2020 ஓகத்து 28 - 2020 செத்தெம்பர் - திசெம்பர் காலப்பகுதிக்கான ரூ.1,748 பில்லியன் தொகை கொண்ட கணக்கு வாக்கிற்கு பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

2020 செத்தெம்பர் 02 - பட்டதாரிகளையும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்து தேர்ச்சியற்ற தனிப்பட்டவர்களையும் ஆட்சேர்ப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது.

2020 செத்தெம்பர் 11 - அநுசரணை வழங்கல், அன்பளிப்பு, விளம்பரங்கள் உள்ளிட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கம்பனி சமூக பொறுப்பாண்மை நடவடிக்கைகளின் தற்காலிக இடைநிறுத்தல் நீக்கப்பட்டது.

## படுகடன் முகாமைத்துவம்

2020 சனவரி 01 - அரச பிணையங்கள் சந்தையில் (இரண்டாந்தரச் சந்தை) மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் கூடுதலான பண்புகளைக் கைப்பற்றுவதற்கு பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் கொடுக்கல்வாங்கல்களின் (தீர்ப்பனவுப் பெறுமதி, விலைகள் மற்றும் வட்டி வீதம் உள்ளிட்ட) பொருத்தமான தகவல்களைப் பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2020 மாச்சு 29 - வாராந்த திறைசேரி உண்டியல் ஏலங்களில் தோன்றிய ஏதேனும் பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்காக இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உதவுதொகைகளுக்கு வசதியளிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2020 மே 06 - நிதியியல் சந்தை வழமைக்கு திரும்பும் வரை திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறி ஏலங்களில் முன்வைக்கப்பட்ட அனைத்து முதிர்ச்சிகளுக்குமான ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவினை வெளியிடுவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

- திறைசேரிமுறி ஏல முறைமையின் கட்டம் III இன் செயற்பாடு சந்தை வழமைக்கு திரும்பியதும் ஏலத்தின் வழமையான நடைமுறையினை மீள அறிமுகப்படுத்தும் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.